கலா நிலயம்.

V 7. ஸ.27. 12.7.1934.


M211,N28KN
N34.7.27
199177

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ஹூ ஜூலை மீ 12உ [No. 27

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 417

2. கம்பராமாயணம் (வாலிவதைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L 419

3. இரவொன்றிற் பல பிழைகள் (அங்கம் 4, களம் 1)
Goldsmith's—"She stoops to Conquer" 421

4. ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை
(ஏனோமு நோசிதிமோ)
P. B. ஸ்ரீநிவாசாச்சாரியார் B.A. 424

5. தமிழ்ப் பாடம்—
கிஷ்கிந்தாகாண்டம்—நளன் தூதுப் படலம். 425

6. மதுரைக்கோவை—(பரத்தையிற் பிரிவு)
S. வையாபுரிப்பிள்ளை B.A. B.L. 428

7. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 8-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B. A. B.L. 430

8. வர்த்தமானம் 432

## க லா நி ல ய ம்

### கல்சுரை யடையும் வகை 4

கல்சார்நிலை முற்றி முதிர்வதற் கோர் அருந்துணையாய் உடனின் றுதவுவன சான்றோரருளிய இலக்கியங்கள். கவிதையைத் தம் உயிர்நிலையாய்ப் பெற்றுள்ள இவை அவ்வுதவியை எவ்வகையில் புரிகின்றனவென் பதுபற்றிக் "கல்சருங் கவிதையும்" என்னுந் தலைபங்கங்களில் விளக்கியுளோமாதலின், அன்னவைகளை மீண்டுங் குரைக்காமல் விடுத்து, அவ்விலக்கியங்களல்லாத வேறுசிலவற்றைப் படிப்பது தகுதியன்றென்னு முண்மையை எடுத்தியம்பத் தலைப்பட்டோம். இலக்கியங்களல்லாதிருந்தும் இக்காலம் பெரும்பகுதியோரால் படிக்கப்படுவன வர்த்தமானப் பத்திரிகைகளும் நிலமென்பதில்லா நாவல்களுமாம். இலக்கியங்களைப் படிக்கவேண்டிய நேரத்தை இவை வீணே கவர்ந்து கொள்வதாலும், படிப்பனவற்றைக் கருத்தூன்றிப் படித்து மனத்தில் நிறுத்திக்கொள்ள வேண்டுமென்ற உயரியநினைவிற்கு முற்றிலும் எதிர்மாறான பழக்கமே செய்துவைப்பதாலும், வரம்பின்றி இவைகளைப் படித்துவருவது தக்கதென ஏற்றுக்கொள்ளல் இயலாததாகின்றது. ஒருவரது காலமும், கருத்தைச் செலுத்திக் கற்கின்ற பழக்கமும், இவ்வாறு கெடுவதுமன்றி வர்த்தமானப் பத்திரிகைகள், முதிராத மனதுடைய பொதுஜனங்களிற் பெரும்பாலோர் கல்சுரை யொருபோதும் அடைவது அரிதாகும்படி, அவர் இயற்கையம்சங்களைக் கெடுக்கவுங் கூடும்.

கல்சர் எனும் வேளாண்மையில், தெய்வசிந்தனை தருமசிந்தனை [illegible] முதலிய இயற்கையம்சங்களே [illegible] எனலாம். [illegible]யுற்ற மனமே விளைநிலம். "நாமும் நல்லவர், இ[illegible]னியும் நமக்குரிய தாய்க் கைகூடவல்லது" என்னும் நம்பிக்கை நீருக்கு நிகராகின்றது. துரும்பையெல்லாம் மலைமலையாக்கிச் செய்யும் ஆரவாரத்தால் மன அமைதியும், மானிடக் கொடுமையை முயன்று காட்டலால் நம்பிக்கையும், நிலைக்காவண்ணம் புரிகின்ற தீமையை வர்த்தமானப் பத்திரிகைகள் பெரும்பாலும் பெருக்கிநடக்கின்றன. நீரும் நிலமும் இவ்வாறு வறிதாவதன்றி, வித்துமே கெடுவதற்கொத்தகுணங்களுஞ்சில அவைகளின்பால் காணலாம். புறவுலகத்துப் போக்குவரவிலேயே மனிதர் கருத்தை இடைவிடாது புகுத்திவருவதால், தெய்வசிந்தனை தெய்ந்துதேய்ந்து இருந்தவிடந் தெரியாமலழிந்துவிடுகின்றதைச் சென்றநாள் கூறினோம்.

தம்மையறியாமலே தமது தருமசிந்தனை சிறிதுசிறிதாக மாறும்படி செய்கின்ற திறமும் பெரும்பாலும் வர்த்தமானப்பத்திரிகைகள் பெற்றிருக்கின்றன. தருமம் என்னுஞ்சொல், அதற்கு நேரான தமிழ்ச்சொல் அறம் என்பதுபோன்று, அவ்வவர் இயற்றவேண்டிய கடமையைக் குறிக்கின்றது. அக் கடமைகளுள் தலைமையாயது, பிறர் துன்புறக்கண்டு தாமும் துன்புற்று அத்துன்பத்தைக் களைதற்கு முயல்வதாம். இதனைத்தான் கொடை என்றனர். ஆதலினால், தருமம் என்ற சொல் கொடை யென்னும் பொருளிலும் [illegible]ங்கிவரலாகின்றது. "ஈதல் அறம்" என்று அறத்தின் இலக்கணத்தைச் சுருங்கச் சொல்லிவைத்தனர் மேலோர். எனின், ஈவதை விலக்குவனவெல்லாம் தருமசிந்தனையைத் தளர்வுறச்செய்யும் தீமையனவாம்.

வர்த்தமானப்பத்திரிகைகளில், சிற்சிலதவிர ஏனையவை, பெரும்பான்மை 'கொடேல்' என்றொருவரையும்

கைபிடித்து விலக்குவதில்லை என்பது உண்மையே. ஆயினும், வர்த்தமானப்பத்திரிகைகளில் வருகின்ற விஷயங்களைப்படித்துவருபவர் மனதில்அவரை அறியாமலே நற்கொடைக்கு நேரெதிராகிய எண்ணங்கள் சூழ்ந்துகொள்ள லாகின்றன. மனிதருக் கோர் உதவி செய்வதென்றால், சங்கங்கள் கூடியும் சட்டதிட்டங்கள் நிறுவியும் செய்தாலன்றி வேறு அவரவர் தாமாகத் தம்மாலியன்றவைகளைச் செய்வதென்னும்நினைவு மெல்லமெல்லப் பொதுஜனங்களின் மனத்தைவிட்டு நீங்கிவிடுகின்றது. ஏழைமை அறியாமை முதலியவைகளின்பால் தமக்கு இயற்கையாயுள்ள இரக்கத்தைச் செயற்கைஇயக்கங்களாக மாற்றிவைப்பதற்கேற்றனவாய்ப் பத்திரிகைகளில் வருகின்ற விஷயங்களில் ஒரு பகுதி அமைந்திருக்கின்றன. வறுமையால் வருந்தும் மக்களைக்காண்கின்றபோது சிலருக்கு இரக்கந்தோன்றலாமெனினும் அவர்களுக்கும், தாமே தம் கையால் கூடிய அளவு, வறியோருக்குக் கொடுத்துச் சிற்சிலர் துயரத்தையேனும் ஆற்றலாம் என்ற எண்ணம் எழா வண்ணம், 'இவ்வறுமையைப் போக்குதற்கு முயலாவகைநம்முடைய அரசியல்முறை அமைந்திருக்கின்றதென்றும், வணிகமும் கைத்தொழிலும் பெருகித்தான் இவ்வறுமை தீரவேண்டுமென்றும், இதற்கேற்றபடி எந்தவெந்தச் சட்டங்கள் நிறுவலாமென்றும், இதற்கென்று பற்பல சங்கங்கள் சேரவேண்டுமென்றும்,' இன்னபடியெல்லாம் வர்த்தமானப்பத்திரிகைகளில் நிகழ்கின்ற வாதங்கள் இடையூறு செய்கின்றன. எதிரிலே பசித்துநிற்பார்க்குச் சோறிடவேண்டுமென்ற நினைவுமின்றி எண்ணாயிரமைல்களுக்கப்பால் உள்ளவர்களுக்கு உதவி செய்யவென்று ஒரு சங்கம் அமைந்திருந்தால் அதனிற்குப் பொருள்கொடுப்பார் பலர். ஏனெனில் இதனைப் பத்திரிகைகள் 'பிரசாரம்' செய்கின்றன; வீட்டுவாயிலில்வந்து குழைகின்றதன் வயிற்றைக் காட்டும் ஏழையோ தன்னுடைய தனிக் குறையைப் பத்திரிகைமூலமாய்த் தெரிவித்துக்கொள்ளும் வகையற்றவனாயிருக்கின்றான். இந்த விபரீதத்தை, ஆங்கிலத்தில் சிறந்த நாவலாசிரியர்களுள் ஒருவராய சார்லஸ் டிக்கன்ஸ் (Charles Dickens) என்பவர், '' தூரதிஷ்டிக் கண்ணாடியால் செய்யுந் தருமம்'' (telescopic philanthropy) என்று தக்கதோர் தொடரால் குறித்துள்ளார்.

கல்விவளர்ச்சியிலும் இதேவித குணத்தைக் காணலாம். இவ் விந்தியதேயத்தில் பொதுஜனக் கல்வி மிகவும்குறைந்திருக்கின்றதெனக் கூறிக்கூறிவருந்துவார் யாதுசெய்கின்றனர். நமது அரசாங்கம் கல்வியைப்பற்றித் தன்னுடைய கவனத்தைப் போதுமான அளவு செலுத்துவதில்லை என்று முறையிடுவார். பாடசாலைகளும் சர்வகலாசாலைகளும் நிறுவுதற்கு முற்படுவார்; அச் சர்வகலாசாலைகளில் தாமும் அங்கத்தினர் ஆவதற்கு முயல்வார். பாடமுறைகளைப்பற்றி வாதிப்பார். ஆசிரியர் அமைப்பர்-எல்லாஞ்செய்வர்—ஆனால், தம் வாய்திறந்து ஒருவருக்கு ஒருபாடம் சொல்லிவைக்க நினைந்திடார். சங்கங்களும் சட்டங்களும் ஸ்தாபனங்களும் நிறுவுவதும் அவைகளில் தாம் முன்னின்று, தலைவர் உபதலைவர் காரியதரிசி உதவிக் காரியதரிசிகள் நிர்வாகக் கூட்டத்தங்கத்தினர், என்னும் இந்தப்பேர்களை வகிப்பதும், அப்பேரிற்குரிய சிறிய அதிகாரங்களைச் செலுத்துவதும், அதனால் ஏதேனும் வருவாயும் உண்டாயின் அதனைப் பெறுவதும் ஆகிய இன்னவித கருமங்களால் கல்வியெனுந் தருமத்தைத்தாம் புரிந்துவருவதாக நினைத்துக்கொள்கின்றனர். இவ்வித நினைவை எழுப்பி நிலைநிறுத்துவதற்கு வர்த்தமானப்பத்திரிகைகள் பலவகைகளில்காரணமாகின்றன. கல்வியில்லான் ஒருவனைக் கண்டக்கால், "இவனுக்கு நாம் கற்பித்தல் வேண்டும்" என்று நமது இயற்கைத் தருமசிந்தனை தூண்டுகின்றது. இந்தச் சிந்தனைக்கு இடையூறு இல்லையெனில் அது ஓரளவு நடைபெறும். ஆனால், வர்த்தமானப் பத்திரிகைகளில் வழங்கலாகின்ற விடயங்களில் பழகியுள்ள மனமானது, உடனே, "நாட்டுக்கு நாடு படித்தவர் தொகையின் வேறுபாட்டையும், நம் நாட்டுக் கல்விமுறைகளில் இருக்கின்ற "ஊழல்களையும்," பணக்காரர்கள் கல்விவிஷயமாய்ச் செலவு செய்யாமல் வீணானவழிகளில் செலவுசெய்வதையும்பற்றி நினைத்துநினைத்து அலைபாயத் தலைப்படுகின்றது. இதனால் ஆரவாரம் அதிகப்படுவதன்றி வேறொன்றும் விளையாமை காண்கின்றோம். கல்வியைப் பேசுவோரெல்லாம், கல்விக்காக 'உழைப்பவ' ரெல்லாம், வேறுவகைகளில் இவ் வர்த்தமானப் பத்திரிகைகளுக்கு இலக்காகிநிற்பவரனைவரும், தத்தம்வரையில் தம்மைச் சூழ்ந்திருப்பவர்களுக்குத் தாமே, சட்டங்களையும் சர்வ கலாசாலைகளையும் பொது ஸ்தாபனங்களையும் எதிர்பார்க்காமல், அவ்வவர்சக்திக்கு ஏற்றவாறு ஒழிந்த நேரங்களில் போதிக்க இசைவாராயின், நாலைந்து வருடங்களுக்குள் இவ்விந்தியநாடு அடங்கலும்—(ஆரம்பக்கல்வி நடுத்தரக்கல்வி, உயர்தரக் கல்வி, கட்டாயக்கல்வி, ஆண்கல்வி பெண்கல்வி, சிறுவர்கல்வி வாலிபர்கல்விஎன்றுமித்திட்டங்களெல்லாங்கிடக்க) யாவரும் சிறந்த கல்விமான்களாகாமல் தீர்வாரோ !

இன்னவிதமே, வர்த்தமானபத்திரிகைகளைப் படிக்கின்ற பழக்கம், மனிதருக்குஇயற்கையாயுள்ள பகுத்தறிவு தன் நெறியில் நடவாமற்செய்கின்றது என்பது புதுமையன்று. சுயநலங் கருதிச் சிலரும், ஒருநலமுங் கருதாச்சிலரும், தாம் கருதிய நலத்திற்கு நேர்எதிராகவே பலரும்,ஓயாமல் உரைத்துவருகின்றவாசகங்கள், பொதுஜனங்களின் மனதில் தோய்ந்துதோய்ந்து, ஓங்கியகுரலில் உரைப்பதெல்லாம், வேறோர்குரல் இதனினும் அதிகமாய் ஒலிக்கும்வரை, உண்மையே என்று அவர்கள் எண்ணிவிவகரிக்கும்படிசெய்துவிடுகின்றன. இல்லையெனில், இந்தஒட்டெடுக்கும் பெட்டிக்குள்ளே மாறுடவாழ்க்கையின் மேன்மையெலாம் அடங்கியிருக்கின்றதென்று இவ்வுலகத்தில் இத்தனைஜனங்கள் அப்பெட்டிக்குள் போடுவதற்கும் புகுவதற்கும் படபடப்பாரோ! எல்லாரும் ஒன்றைச் சொல்லிவருவதாலேயே அது நேரிதாயிருக்கவேண்டுமென்ற நியதியில்லை. மாத்யூ ஆர்னல்ட் (Mathew Arnold) எடுத்துக்காட்டியபடிமாந்தரிற்பெரும்பகுதியோர்உரைப்பனபல உண்மைநெறிக்கு மாறாக இருப்பதுங்கூடும்.

M211, N2?k.N
N34.7.27
199177



# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தாகாண்டம்—7. வாலிவதைப் படலம்

[413-வது பக்கத் தொடர்ச்சி]

வாலியின் வரத்திற் கஞ்சி
எதிர்ந்திடா தெய்தான் கோல்லோ.

மேலெழுந்த கோபத்தால் மிதித்த மலை கீழழுந்த வாலி தன் கண்களிற் பற்களில் உரோமராசிதோறும் கனற்பொறிசிதற,"வந்தனென் வந்தனென்" என உரப்பிப் புறப்பட்டான்.

ஆயிடைத் தாரையென் றமிழ்திற் றோன்றிய
வேயிடைத் தோளினா ளிடைவி லக்கினாள்
வாயிடைப் புகைவர வாலி கண்வருந்
தீயிடைத் தன்னெடுங் கூந்த றீகின்றாள்.

[அப்பொழுது, அமிழ்தம்போன்ற தோற்றத்தையுடைய தாரை என்னும் பெயரையுடையவளும் மூங்கில்போன்ற தோள்களையுடையவளும் ஆகிய அவள், வாலியின் வாயினின்றுபுகைவர அவன்கண்களிலிருந்துவரும் நெருப்பில் தனது நீண்ட கூந்தல் எரிகின்றவளாய், இடையில் வந்து அவ்வாலியை விலக்கினாள்.]

கம்பர்நாடகத்தினுள் மிகமிக அருமையாய்த் திகழ்கின்ற பாத்திரங்களினிடையே இத் தாரைஎன்பாள் தனக்கேயுரிய வொரு தனியிடம் பெறுகின்றாள். "தாரையென்றமிழ்திற்றோன்றிய வேயிடைத்தோளினாள்" எனக்கட்டியங்கூறிக் கம்பர் அவளை இக் களத்தினுள் கொணர்கின்ற கொள்கையினின்று, அவள்பால் அவர் வைத்திருக்கின்ற மதிப்பு விளங்குகின்றது. அருமை மென்மை கொண்டோன்பால் கொண்ட அன்பு, தனக்குநேர்ந்த தீங்குளத்துணையேயாயினும் பிறர்பால் யாதுங் குறைகாணாப்பெருந்தகைமை, பெண்மையின் மேன்மை அனைய நலங்களால் இத் தாரையென்பாள் அம் மண்டோதரியையே ஒக்கின்றாள். இவ்விருவரையுங் கலைநலங்கனிந்தசிந்தைக் கம்பர்கற்பித்து நடத்துகின்ற நீர்மையிற் றோய்ந்த நெஞ்சம், பிறகு அவளைக் குரக்கினத்தலைவியென்றேனும் இவளை ஒரு அரக்கர் குலத் தரசி யென்றேனும் கொண்டு நினைக்கக் கூசும். தாரையின் வாலும் மண்டோதரியின் வர்ளெயிறும் கம்பர்தம் மாண்பமைசித்திரத்தினுட்டங்கமாட்டாமற்றேய்ந்துபோயின. இவ்விருவரும்இராமனால் விதவையாயினர். அங்கொரு கூனிசெய்தகொடுமை இவர் தம்தாலியைச் சென்றுதீய்த்துவிட்டது. மனைவியரையித்துணை மேன்மையுறஅமைத்துவிட்டு அன்னவர்கணவன்மார்களைக்கொன்றுகொன்றுவீழ்த்திய ஒருவன்பால் வெறுப்புச்சாராமல்காப்பதோ மிக அருமை. அத்தகைய காவலையும் ஆற்றுதற்குத்தன்னாலேஇயலுமென்ற துணிவினால் கம்பர் தாரையையும் மண்டோதரியையும் தகவுமிகத் தம் களத்தினுள்கொணர்வாராயினர். ஆயினும், இத்தாரையின் தன்மையும்அவள் இங்கு வாலியைத்தடுத்தவண்ணமும், அதனைமறுத்து வாலி கூறிய காரணமும் கம்பர் வான்மீகத்தினின்றே கைக்கொண்டிருக்கின்றார்.

இராமபிரான் முதலாயினோர் மரங்களினிடையே மறைந்திருக்கச் சுக்கிரீவனால்போருக்கழைக்கப்பட்ட வாலி முன்வந்து மிகவிரைவில் அவனைக் குமைத்துத் தூத்திவிடவே, இராமனிடம் திரும்பி முறையிட்ட சுக்கிரீவனுக்கு, வாலியினின்று அவனை வேற்றுமை அறிந்து எய்யும் வண்ணம் கொடிமாலை சூட்டி மறுபோர்க்கனுப்புதலும், மீண்டும் வந்து நீருண்டமேகம் போல் கர்ச்சித்து நின்றான். அப்பொழுது—

சுக்கிரீவன் இட்ட பேரிரைச்சலை அந்தப்புரத்திலிருந்த வாலி கேட்டுக் கொஞ்சம்தைரியங்குன்றிப் பிறகு பெருங் கோபங்கொண்டான். கோபங்கொண்ட அந்தவாலி இராகுவாற் பற்றப்பட்ட சூரியன்போல ஒளிமழுங்கித் தோன்றினான். பற்கள் பயங்கரமாகத் தோன்றவும், கண்கள் அக்கினிபோலக்கனலவும், பூவுங்கொடியும்பிடுங்குண்ட தாமரையோடையைப் போல வாலி காணப்பட்டான். அந்தச் சத்தத்தைக் கேட்டு வாலி சகிக்கமாட்டாதவனாகிப் பூமி பிளந்துபோமாறு கால்களைஎடுத்துவைத்து விரைந்துபுறப்பட்டான். அந்தச்சமயம் தாரை மிகவும்பயந்து வாட்டமுற்று வாலியினிடத்தில் அதிக அன்புகாட்டி அவனைக் கட்டித்தழுவிக்கொண்டு அவன்நன்மையைக் கருதிஅவனைத் தடுப்பாளாயினாள்:—"வீர, ஆற்றுப்பெருக்கைப் போலப் பொங்கி எழுகின்ற உம்முடைய கோபத்தை விட்டுவிடும். நீர் அதனை இரவிற் புனைந்திருந்த பூமாலையைக் காலையிற்றுயிலெழும்போது களைந்துவிடுவதுபோலவே நீக்கிவிடும். சுக்கிரீவனுடன் நீர் நாளைக்குப் போர்செய்யலாம். தலைவ, உமது பகைவன் அற்பனாயிருத்தலின் உமக்கொரு குறையும் வாராது. நீர் இன்னவாறு அவசரப்பட்டு வெளியிற் செல்லுதலோ எனக்குப் பிரியமில்லை. நான் என் உம்மைத் தடுக்கின்றேனென்பதைக் கேளும். சுக்கிரீவன் முன்னே வெகுண்டு உம்மைச் சண்டைக்கு அழைத்து உம்மால் அடிபட்டுத் தோற்றோடினான். அவ்வாறு உம்மால் தோல்வியடைந்து இடுக்கணுற்ற அச் சுக்கிரீவன் மீளவும் உம்மைப் போருக்கழைப்பதைப்பார்த்தால் எனக்கு மிகுந்த சந்தேகமுண்டாகின்றது. அவனுடைய செருக்கும் உற்சாகமும் அவனிடும் பெரும் பூசலும் அவனுடைய காரியம் அற்பமன்றென்பதைக் காட்டுகின்றன. அவன் துணைவர் யாருமின்றி வந்திருப்பதாக நான் எண்ணவில்லை. அவன் உண்மையாகப் பேருதவி யொன்று பெற்றிருக்கின்றான்; அதனாற்றான் அவன் இவ்வண்ணம் பெரும்பூசலிடுகின்றனன். இயற்கையாகவே அவன் வெகு புத்திமான்; காரியத்தில் நிபுணன். அவன் ஒருவன் வன்மையை அளந்தறியாமல் அவனைத் தனக்குத் துணையாகக் கொள்ளமாட்டான். என் தலைவ, நமது குமாரன் அங்கதன் சொல்ல நான் இன்று கேள்விப்பட்டதைச் சொல்கிறேன் கேளும். அவன் காட்டில்திரிந்தபோது தன்னுடையசாரர்களால் சுக்கிரீவனைப் பற்றிஅறிந்த சமாசாரத்தை என்னிடம்சொன்னான். அதாவது: அயோத்திமாநகரத்துமன்னன் புதல்வரிருவர், இராமர் லக்ஷ்மணர் என்னும் பெயருடையவர்கள், மகாசூரர்கள், போரில் வெல்லற்கரியர்கள், காட்டில் வந்திருக்கின்றார்கள். அவர்கள் சுக்கிரீவனுக்கு நன்மை செய்யவேண்டி இவ்விடம் வந்திருக்கின்றார்கள். உம்முடைய சகோதரன் சுக்கிரீவனுக்கு யுத்தத்தில் துணை இராமர். அவரோஊழித்தீயை ஒத்தவர்; பகைவரை அழிப்பவர்; சாதுக்களுக்குச் சரணமாயுள்ளவர்; புன்கணுற்றோர்களுக்குப் புகலிடமானவர் ; பகைவரால் நலிந்தோரைப் பரிந்து காப்பவர் ; புகழிற் கிருப்பிடமானவர் ; நன்ஞானமும் நற்புத்தியுமுள்ளவர் ; தந்தை சொற்படி நடப்பவர் ; பலவித தாதுக்களுக்கும் இருப்பிடமாகிய இமவானையேபோலக் குணங்களுக்கெல்லாமிருக்கையானவர். இத்துணைப்பெரிய ஆற்றலுடைய இராமரோடு நீர் முரணுவது யுக்தமன்று. சூரனே, இன்னும் ஒன்று யான் சொல்லுவதுளது. என்னிடத்தில் அசூயைகொள்ளாமல் அன்னதனைக் கேளும். இக்கணமே சுக்கிரீவனை யழைத்து இளவரசனாக்கும். நீர் உமது தம்பி

யை வெறுக்காதேயும். இராமரோடு சினேகம்செய்து சுக்கிரீவனிடத்துள்ள பகையையொழித்து அவனுடைய அன்பை மீட்டும் பெறுவது உமக்கு நன்மையென்றெண்ணுகின்றேன். உம்முடைய தம்பியை நீரன்றோ லாலனை செய்யவேண்டும்? உமக்குஅருகிலிருப்பினும் தூரத்திலிருப்பினும் அவனன்றோ உமக்குற்ற பந்துஆவான்? இவ்வுலகில் அவனைப்போன்ற பந்து உமக்கு வேறு இருப்பதாக நான் காணவில்லை. ஆதலால் அவனுக்கு நன்கொடை யளித்து மரியாதை பண்ணி அவனை மீளச் சேர்த்துக்கொள்ளும்· அவனொடுபகை பாராட்டாமல் அவனை உமது பக்கத்தில் இருத்திவையும். சுக்கிரீவன்தான் உமக்குஉற்றதுணைவன். அவனுடைய அன்பைப் பெறுவதிலும் உமக்குச் செய்யத்தக்கது வேறுளதென்று நான் எண்ணவில்லை.உம்முடைய நன்மையையே நான் விரும்பினவள் என்று, என்னுடைய எண்ணத்தின்படி நடத்தற்கு உமக்கு இஷ்டமானால் நான் வேண்டிக்கொள்வதை நீர் செய்யும்; நான் கூறும் நற்புத்திகளைக் கேளும். கோபத்திற் கிடங்கொடுக்க வேண்டாம். இந்திரனுக்கொப்பான வலிமையையுடையகோசலத்தார் கோமகனோடு நீர் முரணுவது உமக்கு நன்மை பயக்காது'' என்றாள். தாரை இவ்வாறு கூறிய நன்மைபயக்குஞ் சொற்கள் காலன்கை யகப்பட்ட வாலிக்கு ஏற்கவில்லை.

சந்திரன்போன்ற முகத்தையுடைய தாரை இவ்வாறு சொல்லவும், வாலி யவளைக் கடிந்து ''மாதே, என் தம்பியும் சத்துருவுமான சுக்கிரீவனிவ்வாறு உறுமிக் கர்ச்சிக்க நான் அதைக்கேட்டு எப்படிப் பொறுத்திருப்பேன்? பயந்தவளே, சமர் முகத்தில் தோல்வியடையாதவர்களும் ஓடாதவர்களுமான வீரர்கள் இவ்வித அவமரியாதையைச் சகிப்பதனினும் உயிரைக்கொடுத்துவிடுவார்கள். என்னுடனே போர்புரியவிரும்பிஇச்சுக்கிரீவனிடும் பூசலை நான் சகிக்க மாட்டேன்? இராமரால் எனக்குக் கெடுதி நேருமென்று நீ பயப்படவேண்டாம். தருமம் உணர்ந்தவரும் நன்றியையறிந்தவருமான இராமர் எங்ஙனம் தீமை செய்வார்? நீ ஏன் என்னைத் தொடர்ந்துவருகின்றனை? மற்றைப் பெண்களோடு நீயுந் திரும்பிச்செல். என்னிடத்தில் நீ அன்பும் ஆசையுமுடையவள் என்பதை முன்னரே காட்டிவிட்டாய். நான் அவ்விடம்சென்று சுக்கிரீவனோடு போர்செய்து அவனைக் கொல்லாமல் அவனுடைய செருக்கை அடக்கிவிடுகிறேன். உனது விருப்பத்தின்படி அவனைச் சண்டையில் நெருக்காமல், கையாலும் தடியாலும் அடித்துஓட்டிவிடுகின்றேன். அவன் எனதுபலத்தையும்பேராற்றலையும் சகிக்கவல்லவனல்லன். மாதே, நீ எனக்கு நல்ல புத்திகள் சொல்லி உன்னுடைய அன்பைக் காட்டிவிட்டனை. என் ஆணை நீ திரும்பிவிடு· நான் என் தம்பி சுக்கிரீவனைச் சமரில் வென்றபின் திரும்புவேன்'' என்றுசொன்னான். இவ்வாறு தடுக்கப்பட்ட இனிய மொழியையுடைய தாரை வாலியைத் தழுவிக்கொண்டு, கண்களில் நீர்பெருக அவனை வலம்வந்து, அவனுக்கு வெற்றியுண்டாகவேண்டுமென்று மந்திரசகிதமாய் வாழ்த்தி, துக்கத்தான்மீதூரப்பட்டு, மற்றைப் பெண்களோடும் அந்தப்புரத்தை யடைந்தாள்.

இந்தச்செய்தியைக் கம்பரும் பெரும்பாலும் இவ்வாறே நிகழ்த்துகின்ற செவ்வியை இனிக்காணலாம். வாலியின் கண்வருந் தீயிடைத் தன்னெடுங் கூந்தல் தீய வந்து விலக்குமத் தாரையை நோக்கி வாலி,

விலக்கலை விடுவிடு விளித்து ளானுரங்
கலக்கியக் கடல்கடைந் தமுதங் கண்டெனை
உலக்கவின் னுயிர்குடித் தொல்லை மீள்குவன்
மலைக்குல மயிலெண மடந்தை கூறுவாள்

[மலையில் வாழுகின்ற சிறந்த மயில்போன்றவளே, என்னைத் தடுக்காமல் விட்டுவிடு. அந்தப் பாற்கடலைக்கலக்கி அமிர்தம் எடுத்ததுபோல, என்னைப் போருக்கழைத்தவனது வலியைச் சிதைத்து அவன் இறக்க அவனது இனிய உயிரைக்குடித்து விரைவினில்மீள்வேன்'' என்றுசொல்ல அவன் மனைவி மீண்டுங் கூறுவாள்.]

கொற்றவ நின்பெருங் குவவுத் தோள்வலிக்
கிற்றைய னல்லனு லீடுண் டேகுவான்
பெற்றிலன்பிறந்திலன் பெயர்த்தும்போர்செயற்
குற்றது நெடுந்துணை யுடைமை யாலென்றாள்

[வெற்றியுடையவனே, அச்சுக்கிரீவன், உனது பெரிய திரண்ட தோள்களை எதிர்க்கவருகின்றது இன்றைக்குத் தான் முதல்தரம் அன்று. முன்னரே ஈடழிந்து போனவன், புதியவோர் பலத்தைப் பெற்றிருக்கின்றானல்லன், அல்லது, புதுப்பிறவியொன்று எடுத்து வந்திருக்கின்றான் அல்லன். எனின் மீளவும் அவன் உன்னுடன் போர்செய்வதற்கு வந்திருக்கும் இதுதான், பெரிய ஒரு துணைவனை அவன் அடைந்திருப்பதனால் ஆகும், என்றாள்]

மாதர்க்குரிய பேதைமை என்னும் இயற்கையடைமொழிக்கு யாதும் குறைவின்றித் தாரை தன் பேறிவைப் புலப்படுத்தும்இவ்வாசகம் அமைந்த அழகும், அதனோடு அவளது இதயத்தினின்று வாலியின்பால் மெய்யன்பு தோன்றுகின்ற மேன்மையும், அந்நெடுந்துணைவனும் இராமனே என்பதும் இவளுக்குத்தெரிந்திருந்தும், அவனது பெயரைக் குறிக்காமல் இங்கு அற்றங்காத்த அருமையும், எல்லாம் இவ்வானரவனிதைக்குப் பெண்மையுலகில் ஒரு தனிப்பேராசினை அளிக்கின்றன. தன் மேம்பாட்டின் நினைவினாலும், தன் தம்பியின்பால் வைத்த வன்மத்தினாலும் மயங்கியமதியுடை வாலி தனதருமைத்தேவியின் நல்லுரை நயத்தினை உட்கொள்ளும் வகையற்று,

மூன்றென முற்றிய முடிவில் பேருல
கேன்றுட னுற்றன வெனக்கு நேரெனத்
தோன்றினும்தோற்றவை தொலையுமென்றலின்
சான்றுள வன்னவை தையல் கேட்டியால்

[மூன்றாக வகுக்கப்பட்டு நிறைந்துள்ள அழிவில்லாத பெரிய உலகங்களெல்லாம் இணங்கி ஒன்றுசேர்ந்து எனக்கு எதிராகவந்து தோன்றினாலும், அவை தோற்று ஓடும் என்பதற்குச் சாக்ஷிகள் உள, அழகிய பெண்ணே, அவற்றைக் கேள்.]

என்று தான் பாற்கடல் கடைந்து அமரருக்கு அமுதளித்த வரலாற்றினை விளம்புவானாகி,

மந்தர நெடுவரை மத்து வாசுகி
அந்தமில் கடைகயி றடைக லாழியான்
சந்திரன் றாணெதிர் தருக்கின் வாங்குநர்
இந்திரன் முதலிய வமர ரேனையோர்.

[மந்தரம்என்னும் பெரிய மலை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பானது எல்லையில்லாமல் நீண்ட கடைகயிறாகவும், சக்கிராயுதத்தையுடைய திருமால் கூர்மாவதாரம் எடுத்து அடைகல்லாகவும், சந்திரன் அடைதூணாகவும், களிப்புடன் எதிரெதிர் நின்று இழுப்பவர் இந்திரன் முதலிய தேவர்களும் ஏனைய அசுரர்களும் ஆகி அமைந்து]

பெயர்வுற வலிக்கவு மிடுக்கில் பெற்றியா
ரயர்வுற லுற்றதை நோக்கி யானது
தயிரெனக் கடைந்தவர்க் கமுதந் தந்தது
மயிலியற் குயின்மொழி மறக்க லாவதோ.

[அம்மலை அசையும்படி இழுக்கவும் வலிமையற்றவர்களாய் அயர்ந்துபோனதை நான் பார்த்து அப்பாற்கடலைத் தயிர்கடைவதுபோல்கடைந்துஅவர்களுக்கு அமிர்தத்தை எடுத்துக்கொடுத்தேனென்பதை, மயில்போன்ற சாயலும் குயில்போன்ற மொழியும் உடையவளே, மறக்கலாமோ.]

ஆற்றினெ னமரரு மவுணர் யாவருந்
தோற்றன ரெனையவர் சொல்லற் பாலதோ



கூற்றுமென் பெயர்சொலக் குலையு மாரினி
மாற்றவற் காகிவந் தெதிரு மாண்பினர்

[இப்படி, தேவரும் அசுரரும் யாவரும் செய்யமாட்டாமல் தோற்றவொருகாரியத்தை நான் செய்துமுடித்தேன். மற்றவர்களைச் சொல்லவும் வேண்டுமோ. எமனும் என் பெயரினைக் கேட்க நடுங்குவான். இனி என் பகைவனுக்குத் துணையாகவந்து என்னை எதிர்க்கவல்லவர் யார் இருக்கின்றனர்.]

பேதைய ரெதிர்குவ ரெனினும் பெற்றுடை
ஊதிய வரங்களு முரமு முள்ளதிற்
பாதியு மென்னதாற் பகைப்ப தெங்ஙனம்
நீதுய ரொழிகென நின்று கூறினன்.

[அறிவில்லாதவர் சிலர் என்னை எதிர்ப்பார்களே யானாலும் அவர்கள் பெற்றுள்ள, பலனுடைய வரங்களிலும்வலிமையிலும் அவர்களுக்கிருப்பதில் பாதி என்னுடையதாகிவிடும். ஆகையாலவர்கள் என்னைப்பகைத்து என்னபயன். நீ துயரப்பட வேண்டா'' என்னச் சிறிதுபொழுது அங்கு நின்று தாரைக்குச் சமாதானங் கூறினான்.]

எதிர்த்தவர் வரத்தினு முரத்திலும் பாதி வாலியை எய்துமென்னுமிது வான்மீகத்திற் கூறப்பெற்றிருக்கவில்லை. தன் சுயபலத்தினோடு எதிர்த்தவர் பலத்திலே பாதியையும் எய்திவிட்டானாயின் பின்னர் வாலியை வெல்லலென்பது எந்நாளும்யாராலும் இயல்வதில்லை. இதனுண்மையை இங்கு வாலியின்கூற்றினால்மாத்திரமன்றிப் பின்னர்,

அரங்கி னாடுவாற் கன்புபூண் டடைவர மறியேன்
இரங்கி யானிற்ப வென்வலி யவன்வ யினெய்த
வரங்கொள்வாலியாற்றோற்றனென் மற்றும்வேறுள்ள
குரங்கெலாமெனைவெல்லுமென் றெங்ஙனங்கோடி

[அரங்கில் ஆடுகின்ற சிவபிரான்பால் பெற்ற வரத்தை அறியாதவனாய் இளைத்து நான் நிற்க, என் வலி அவனைச் சென்று சேரும்படி வரங்கொண்டிருக்கின்ற வாலியினால் நான் தோல்வியடைந்தேன். அதுபற்றி எந்தக் குரங்காயினும் என்னை வென்றுவிடும் என்று நீ எங்ஙனம் கொள்ளலாம்.]

என்று இராவணன் பின்னர் விபீடணனுக்குக் கூறுவதினின்றும் அறிந்துகொள்ளலாம். தாரையைத்தேற்றும்பொருட்டு வாலியும், தான் ஈடழிந்த பரிபவத்தை மறைப்பதற் கோர் காரணமாக இராவணனும், இதனைப் பொய்யே இயம்பினர் என்று எண்ணல் நேரிதன்று. முன்னர், ''கிட்டுவார்பொரக் கிடைப்பி னன்னவர் பட்டநல்வரம் பாக மெய்துவான்'' அவ்வாலி என்று அனுமனும் இராமபிரானுக்குக் கூறியிருக்கின்றான். ஆதலாற்றான் இராமன், வாலியின் எதிர்நின்று வெல்லலென்பது எத்திறத்திலும்இயலாதென்பதை உன்னி, வேறுநின்று எவ்விடத் துணிந்தனன் போலும் என்று ஐயுறுவார்,

நீல கண்டனு நேமியு நேர்நின்று நேரின்
ஏலு மன்னவ ருடைவலி யவன்வயி னெய்தும்
சாலு நல்வர நினைந்தவ னெதிர்செலத் தவிர்ந்து
வாலி தன்னையு மனித னுமறைந்துநின் றெய்தான்

[சிவபிரானும் திருமாலும் நேர்நின்று வாலியை எதிர்க்க நேர்வராயின், பொருந்திய அவர்களுடைய வலிமையும் அவனிடம் சார்ந்துவிடும் என்கின்ற சிறந்த நல்ல வரம் அதனைநினைத்து அவனுக்கு எதிர்செல்வதை ஒழித்துஅவ் வாலியை மனிதனாகியஇராமன் மறைந்துநின்று எய்தான்]

என்று இராவணன் விபீடணனுக்கு இச்செய்தியைக் கூறியுள்ள மொழிகளையுஞ் சான்றாகக்கொள்ளலாம். ஆயினும், மிகவும் ஆபத்தான இவ்வரம் வாலிக்கு இருப்பதைச் சுக்கிரீவனே முதலில் இராமனுக்குச் சொல்லி எச்சரிக்கை செய்யாததோடு, வாலி இராமனை ஏசுவான் இயம்புலுற்றபோது, ''இவ்வரம்எனக்கிருந்ததா லன்றோ எதிர்வரத் துணியாமல் கரந்தெய்தனை நீ'' என்பதனைய யாதும் பேசி இடித்துரைக்காமையும், அச்சான்றின் உறுதியைச் சிறிது தளர்த்துகின்றது. அன்றியும், பகைகொண்டு வாலியை அழிக்கப் புகுவோர், அவன் எதிர்நின்றால் இழக்கவேண்டிய பலத்தைக் கரந்திருந்தால் இழக்கவேண்டாமை அவன் பெற்றுள்ள வரத்தின் நோக்கமாயின், அதுவோ வஞ்சனை பெரிதுடைத்து. மற்று, இவ்வகை ஓர் வரம் வாலிக்கிருப்பது உண்மையாயின், மாயாவியும் துந்துபியும் அதனை அறிந்தோ அறியாமலோ அவனை அறைகூவி அடர்க்க வந்தனர்? தெரியுமாயின், அளவற்ற மிடலுடைய வாலியின் கையில் தங்கள் பலத்தின்பாதியையுங்கொடுத்துப் பிறகுஅவனுடன் போர் செய்யப் புக்கதனினும் பேதைமை நினைத்தலரிது.

---

## இரவொன்றிற் பல பிழைகள்

[Oliver Goldsmith's—"She Stoops to Conquer"]

அங்கம் 4. களம் 1.

[411-வது பக்கத் தொடர்ச்சி]

ஹார்ட்காஸல்:—என்வீடு இதுவென்று எனக்கே தெரியாமற் போய்விட்டதே. எல்லாம் தலைகீழாகிவிட்டது. அவன் வேலையாட்கள் குடிவெறி கொண்டு திரிகிறார்கள். இனி இதனை என்னால் பொறுக்க முடியாது. இருப்பினும், அவன் தந்தையினிடத்தில் நான் வைத்திருக்கின்ற மதிப்பைக் கருதிச் சிறிது அமைதியா யிருக்கவேண்டும், (மார்லோவைப் பார்த்து)ஐயா, வணக்கம்; என மிகத் தாழ்ந்த வணக்கம் (தலையால் வணங்குகிறான்)

மார்லோ:—அதனினுந் தாழ்ந்த வணக்கம். (ஒருபுறமாய்) இன்னும் என்னவித்தை காட்டப்போகின்றானோ தெரியவில்லையே.

ஹார்ட்:—ஐயா, உங்கள் தந்தையின் பிள்ளையை நான், ஐயா, எவ்வளவு மனமுவந்து வரவேற்றுக் கொள்வேன் என்பது, ஐயா, உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமென்று ஐயா, நான், ஐயா, நம்புகின்றேன்.

மார்லோ:—ஐயா, மனப்பூர்வமாய், ஐயா, எனக்குத்தெரியும், ஐயா. ஆயினும், ஐயா, அதிகஉபசாரம் எனக்கு அவசியமில்லை. என் தந்தையின் பிள்ளை எங்குச்சென்றாலும்அங்கு அவனை நன்றாக வரவேற்றுக்கொள்ளும்படி செய்துவிடுவது என் வழக்கம்.

ஹார்ட்:—ஐயா, மனப்பூர்வமாய் அப்படித்தான் செய்து விடுகின்றீரென்று நம்புகிறேன். உங்கள் நடத்தையைப் பற்றி நானொன்றுஞ் சொல்லவில்லை; ஆயினும், உங்கள் வேலையாட்களின் நடத்தையோ தாங்க மாட்டாததாக இருக்கின்றதென்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இப்படிக் குடித்துத்திரிகின்ற இது

இவ்வீட்டின் ஒழுக்கத்தைக் கெடுத்துவிடுகின்றது.

மார்லோ:—நல்லவென் ஐயா, அது என்குற்றமல்லவே. குடிக்கவேண்டியபடி குடிக்காவிட்டால் அது அவர்களுடைய குற்றமே. வயிறு கொண்டவரையிலும் அதற்கு மேலும் குடிக்கும்படிதான் நான் அவர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறேன். (உட்புறம் நோக்கி) என் வேலையாட்களில் ஒருவன் இங்கு வரட்டும். (ஹார்ட்காஸலைப் பார்த்து) நான் குடிப்பதில்லையாகையால் இதையும் சேர்த்து எனது வேலையாட்கள் குடித்துத் தீர்க்கவேண்டுமென்றுதான் நான் அவர்களுக்கு உறுதியாகச் சொல்லியிருக்கிறேன்.

ஹார்ட்:—எனின், தங்கள் உத்தரவின்மேல் தான் இப்படிச் செய்கிறார்கள் அவர்? திருப்தியடைந்தேன் நான்.

மார்லோ:—சந்தேகம் வேண்டாம்; இப்படியே செய்யும்படி நான் அவர்களைக் கட்டாயப்படுத்தியிருக்கிறேன், அவர்களில்ஒருவன் தானே சொல்வான், கேள்.

[குடிவெறி கொண்டவொரு வேலையாள் வருகிறான்]

மார்லோ:—ஏடா, ஏ! வாடா எதிரே. என் உத்திரவு என்ன? தாராளமாய்க் குடிக்கும்படியும், இந்த வீட்டின் நன்மைக்காக உங்களுக்கு வேண்டியவைகளையெல்லாம் வாங்கிக்கொள்ளும்படியும், நான்உங்களுக்கு உத்தரவிட்டிருக்கவில்லையா, சொல்.

ஹார்ட்:—(ஒரு புறமாய்) என் பொறுமையெல்லாம் பறந்தோடிப் போகின்றதே.

வேலையாள்:—சாமி, சுதந்தரமே, ஆஹாஹா, எங்கள் சுதந்தரமே! நானொரு வேலையாளாக இருந்தபோதிலும், மற்றவருக்கு நானென்ன குறைந்துவிட்டேன்!யார் சொன்னாலும்,நான் சாப்பிடுவதற்கு முன் குடிக்கமாட்டேன். சாமி, நல்ல சாப்பாட்டின் மேல் நல்லசாராயம் நன்றாக உட்காரும், ஆனால்,நல்ல சாப்பாடோ, சாமி என் (விக்குகிறான்) என் (விக்கல்)மனச்சாக்ஷியின் மேல் (விக்கல்) சாமி (விக்கல்) உட்காராது (விக்கல்).

மார்லோ:—இதைவிட ஒருவனுங் குடிக்கமுடியாதென்பதை, நண்பா, நீயே பார்த்துக்கொள். இன்னும் இவன் என்ன செய்யவேண்டுமென்று எண்ணுகிறாயோ எனக்குத் தெரியவில்லை. சாராயக் குளத்தில் இவனை முழுக்கவேண்டுமென்று விரும்புகிறாயோ!

ஹார்ட்:—(ஒருபுறமாய்) இன்னும் என் கோபத்தை அடக்குவேனானால் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும். (அவனைப் பார்த்து) ஐயா, மார்லோ, உன்னுடைய துஷ்டத்தனத்தை யெல்லாம் நான் இந்த நான்கு மணிநேரம் பொறுத்துக்கொண்டிருந்தேன். அதுவோ முடிவுக்கு வருவதாகக் காணவில்லை. என்னுடைய வீட்டில் நானே இனி எசமானனாகவேண்டுமென்பது என் தீர்மானம். நீயும் உன் குடிகாரக் கும்பலும் உடனே இவ்வீட்டைவிட்டு வெளிக்கிளம்பும் வழியைப் பார்க்கவேண்டும்.

மார்லோ:—வெளிக் கிளம்புவதா! நன்று சொன்னாய், நண்பா, நன்று சொன்னாய்! உன்னைத் திருப்தி செய்யவேண்டு மென்றல்லவோ நான் இத்தனை பாடு படுகிறேன்.

ஹார்ட்:—நான் திருப்தியடையவில்லை; ஆகையால் நீ இவ்வீட்டைவிட்டு இனிப் போகலாம்.

மார்லோ:—நிச்சயமாகவா? இவ்விரவிலா? இந்த இருட்டிலா? ஏதோ என்னுடன் விளையாடுகிறாய்!

ஹார்ட்:—உன்னுடன், ஐயா, நான் விளையாடவரவில்லை; வினைதான். என் கோபம் கிளம்பிவிட்டபடியால் சொல்கிறேன், இவ்வீடு என்னுடையது;என்னுடையவீடு இது, உடனே நீ இதைவிட்டுப் போகும்படி கட்டளையிடுகிறேன் நான்.

மார்லோ:—ஹ! ஹ! ஹா! சேற்றுக் குட்டையில் அடிக்கின்றது பெரும்புயல். இதைவிட்டு அடியெடுத்து வைக்கமாட்டேன், அது நிச்சயம். ஏடா பயலே, உன் வீடாடா இது! இது என் வீடு; என்னுடைய வீடு இது. நான் இருக்க இஷ்டப்படுகின்ற வரையில் என் வீடுதான் இது. இதைவிட்டு என்னைப் போகச்சொல்வதற்கு உனக்கு என்னஉரிமை இருக்கின்றது? உன்னைப்போன்ற துஷ்டனை என் ஜன்மத்தில் நான் இதுவரையிற் பார்த்ததில்லை.

ஹார்ட்:—நானும் அப்படித்தான். என் வீட்டிற்கு வருவது, வேண்டியதைக் கேட்பது, என் குடும்பத்திலுள்ளவர்களை அவமரியாதை செய்வது, குடிவெறி கொள்ளும்படி தன் வேலையாள்களுக்குக் கட்டளையிடுவது, அப்புறம், 'இந்த வீடு என்னுடையது ஐயா' என்று எனக்குச் சொல்வதா. ஹ! ஹ! ஹா! ஐயா, வீட்டைத்தான் எடுத்துக் கொண்டீர், ஜங்கம சொத்துக்களையும் எடுத்துக்கொள்வதைப்பற்றி நீர் என்ன நினைக்கிறீர்; கூடை முறம் துடைப்பம்......இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியிருக்குமே.

மார்லோ:—என் கணக்கைக் கொண்டுவா, உடனே என் கணக்கைக் கொண்டுவா! இனி ஒரு வார்த்தை பேசவேண்டியதில்லை.

ஹார்ட்:—சித்திரப்படங்களும் சில இருக்கின்றன. துன்மார்க்கன் அடைந்த கதியைக் காட்டுகின்ற அந்தப்படம் உங்களுக்கு நிரம்ப அவசியமாயிருக்கும்.

மார்லோ:—கொண்டுவா என்கணக்கை-உன்னையும் பாழான உன் வீட்டையும்விட்டுத் தொலைவேன்.

ஹார்ட்:—மேசை யொன்றிருக்கிறது; அதன் மெருகில் தங்கள்முகத்தழகைப் பார்த்துக்கொள்ளலாம்.

மார்லோ:—கொண்டுவா என் கணக்கை.

ஹார்ட்:—என்னைக் கிளப்பிவிட்டு நீங்கள் சாய்ந்து கொண்டீர்களே அந்த ஒரு நாற்காலியை மறந்துவிட்டேன். நன்றாய்த் தின்றபிறகு உறங்குவதற்கு அது நிரம்ப உபயோகப்படும்.

மார்லோ:—என் கணக்கைக் கொண்டுவா என்று நான்சொல்வது உன் காதிற் படவில்லையா? வேறு இனிப் பேச்சு வேண்டியதில்லை.

ஹார்ட்:—இளைஞா, இளைஞா, உன் தந்தை எழுதிய கடிதத்திலிருந்து, மிக்கஅடக்கமும் ஒழுக்கமும் உடைய ஒரு பிள்ளையைச் சந்திப்பேனென்று எதிர்பார்த்திருந்தேன். ஆயினும், மூடனும் மூர்க்கனும் உன்னைவிட வேறொருவன் இருக்கவே முடியாதென்பதைக் காட்டிவிட்டாய். அவரே இங்கு வருவார், வந்து தெரிந்துகொள்ளட்டும். (போகிறான்)

மார்லோ:—என்ன விது! இந்த வீட்டை நான் தப்பாக எண்ணிவிட்டேனா, என்ன? பார்ப்பதற்கு எல்லாம் சாப்பாட்டுக் கடைபோலத் தானே இருக்கின்றது. வேலைக்காரர்கள் 'வந்தாட்டேன்' 'வந்தாட்டேன்' என்று கத்துகிறார்கள். அந்த வேலைக்காரிச்சிறுமியைக் கேட்டால் தெரியும். இதோ அவளும் வருகிறாள். எங்கே குழந்தை இத்தனை வேகம்? ஒரு வார்த்தை......



[காதெரின் வருகிறாள்]

காதேரின்:—ஆயின் அந்த வார்த்தை மிகவும் சிறியதாயிருக்கட்டும். எனக்கு அவசரம்—(ஒருபுறமாய்) தன்னுடையபிழையைத்தெரிந்துகொள்ளத் தலைப்பட்டிருப்பதுபோல்தோன்றுகிறது; ஆயினும், இதற்குள் இவனுக்கு முழுவதையுந் தெளிவித்துவிடலாகாது.

மார்லோ:—இந்தா, குழந்தாய், ஒரு கேள்விக்குப் பதிற்சொல். நீ யார், உனக்கு இந்த வீட்டில் என்ன வேலை?

காதேரின்:—இந்தக்குடும்பத்தினர்களுக்குநானோர் உறவினள், ஐயா.

மார்லோ:—ஏழை உறவினளோ?

காதேரின்:—ஆம் ஐயா, சாவிகளை வைத்துக்கொள்வதற்கும், என்னால் கொடுக்கக்கூடிய எதிலும் குறைவில்லாமல் விருந்தினர்களைப் பார்த்துக்கொள்வதற்கும் என்னை அமர்த்தியிருக்கிறார்கள்.

மார்லோ:—அதாவது, நீ இந்தச் சாப்பாட்டுக்கடையில் பரிசாரகம் செய்கின்றாய் என்று சொல்.

காதேரின்:—சாப்பாட்டுக் கடையா! அட தெய்வமே! இந்த எண்ணம் உங்கள் தலையில் எப்படி ஏறியது? இந்த ஜில்லாவில் சிறந்த குடும்பத்தினர் இவர் சாப்பாட்டுக்கடை வைப்பதா! ஹ, ஹ, ஹா!ஹார்ட்காஸல் மாளிகையைப்போய்ச் சாப்பாட்டுக்கடைஎன்கின்றீரே!

மார்லோ:—ஹார்ட்காஸல் மாளிகை! இதுவா ஹார்ட்காஸல் மாளிகை?

காதேரின்:-ஆம்; பின் இது வேறு யாருடையதாக இருக்கவேண்டும்?

மார்லோ:—ஓஹோஹொ! பின் எல்லாம் பாழாய்ப் போயிற்று. ஐயோ!இப்படி மோசம்போனேனே நான். பட்டினம் முழுவதும் என்னைக்கண்டு சிரிப்பார்களே. மடையன் என்தலையில் இடிதான் விழாதா! எல்லாங் கிடக்க இந்தவீட்டைச் சாப்பாட்டுக்கடையென்றும் என் தந்தையின் பழைய நண்பர் ஒருவரைச் சாப்பாட்டுக் கடைக்காரனென்றும் எண்ணினேனே! எவ்வளவு கொழுப்புப்பிடித்த நாயென்று என்னை அவர் நினைக்கமாட்டார். அவர் நினைப்பது கிடக்க, என் கண்ணுக்கே நான் அப்படித்தானே தோன்றுகின்றேன்! அது ஒன்றோடு விட்டேனா, என்கண்ணே, உன்னையும் அல்லவோ நான் வேலைக்காரியாக மதித்துவிட்டேன்.

காதேரின்:—அப்பாடா, அப்பாடா! என்னை ஒரு அற்ப வேலைக்காரியாக நினைப்பதற்கு என் நடத்தை ஒன்றும் இடம் கொடுத்திருக்காதென்று எண்ணுகிறேன்.

மார்லோ:—இல்லை, இல்லை, என் கண்ணே, இல்லை நான் கொள்ளைகொள்ளையாகத் தப்புக்கள் குவிப்பதென்று புறப்பட்டேன், ஆகையால் உன்னையும் அந்தக் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளாமல் தவிர்க்க முடியவில்லை. என்மூடபுத்தி எல்லாவற்றையுந் தலைகீழாகப் பார்த்தது. உன் ஊக்கத்தை உற்சாக மென்றும், உன் இயற்கை வசியத்தைத் தளுக்குமினுக் சென்றும் மதித்துவிட்டேன். இனி என்ன! எல்லாந்தான் முடிந்ததே—இந்தவீட்டில் இனி என் முகத்தைக் காட்ட வழியில்லை.

காதேரின்:—உங்கள் சவுகரியத்திற்கு விரோதமாக நான் ஏதேனுஞ் செய்துவிட்டேனோ, ஐயா. இவ்வளவு மரியாதையாக என்னைநடத்தி மென்மொழிகள் அவ்வளவு எனக்குக் கூறிய ஒரு பெருமகன் மனங்கோணும்படி நான் ஏதாவதுசெய்துவிட்டதாக ஏற்பட்டால் எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கும். (அழுகின்றவள்போல் பாவனைசெய்து) நீங்கள் வீட்டைவிட்டுப் போவதற்கு நான்தான் காரணமானேனானால் அந்தத் துக்கம் என்னால் பொறுக்கமுடியாது. என் ஒழுக்கத்தைத் தவிர எனக்கு வேறு செல்வமில்லை; ஜனங்கள் என்னைப்பற்றி ஏதாவது வித்தியாசமாகப் பேசுவார்களானால் நான் பிறகு, ஐயோ, என்னதான் செய்வேன்.

மார்லோ:—(ஒருபுறமாய்) அட தெய்வமே! அழுகின்றாளே இவள். அடக்கமுடைய ஒரு பெண் என் பொருட்டு இளகியது இதுதான் முதன்முறை. இதனைக் காண என் மனம் இரங்குகின்றது. (அவளைப் பார்த்து) அழகுவாய்ந்த பெண்ணே. என்னை நீ மன்னித்துக்கொள். இக் குடும்பத்தில் உன் ஒருத்தியைத்தான் பிரிவதற்கு மனமில்லாமல் இவ்வீட்டை விட்டுப் போகிறேன். எனினும், வெளிப்படையாக ஒன்று உனக்குக் கூறுகின்றேன் கேள். பிறப்பாலும் செல்வத்தாலும் படிப்பாலும் நம்மிருவருக்கும் இடையே இருக்கின்ற வேற்றுமையானது கௌரவமான வகையில் நம்மிருவருக்கும் ஒரு சம்பந்தம் ஏற்படுவதற்குத் தடையாயிருக்கின்றது. என் பெருந்தன்மையில் நம்பிக்கை வைத்த ஒருத்தியைக் கெடுத்து, அளவிறந்த அழகுடையவளாயிருப்பதல்லாமல் வேறோர் குற்றமில்லாதவளை நாசமாக்குகின்ற எண்ணத்திற்கோ நான் இடங்கொடுக்கமாட்டேன்.

காதேரின்:—(ஒருபுறமாய்)பெருந்தன்மை யன்றோ இது! உன்னையே விரும்புநாடும் என்மனம்.(அவனைப் பார்த்து) ஆயினும், ஐயா,என் குடும்பமும் காதெரின் பிறந்த குடும்பத்திற்குக்குறைந்ததில்லை.நான் ஏழையாயிருந்தாலும், திருப்தியோடிருந்த என் மனம், இந்நிமிஷம் வரையில் அதுபற்றி வருந்தியதில்லை. செல்வமில்லாதவர் சீரழிந்துவிடுவார்களென்று நான் இதுவரையில் சிந்தித்ததுமில்லை.

மார்லோ:—வனப்புடைய பேதையே, இப்பொழுதுமாத்திரம் அப்படிச் சிந்திக்க நேர்வானேன்?

காதேரின்:—ஏனெனில், ஆயிரம்பொன் என்கையிலிருந்தாலும் அத்தனையும் யாருக்கு நான் உடனே கொடுத்துவிடுவேனோ, அவரிடத்திலிருந்து என்னைப் பிரித்துவிடுகின்றதே இவ்வேழ்மை.

மார்லோ:—(ஒரு புறமாய்) இந்தப் பேதைமை என்னைக் கவர்ந்துவிடுகின்றது. இன்னும் இங்கு இருப்பேனானால் என்னை முற்றிலும் வென்று தன் வசமாக்கிக் கொண்டுவிடும் அது. முயன்று துணிந்து இவளை நான் விட்டுச்செல்லவேண்டும்.(அவளைப்பார்த்து)என்மேல் நீகாட்டுகின்றபக்ஷமானது, எனதன்பே,என்னை அதிகமும்இளக்குகின்றது. நான் எனக்காகமட்டுமே வாழ்வதானால் வேறுயோசனையில்லாமல் அவ்வாழ்க்கைத் துணைவியை நான் இப்பொழுதே தேர்ந்துகொண்டு விடலாம். ஆனாலோ, உலகத்தின் அபிப்பிராயத்திற்கும் ஒரு தந்தையின் அதிகாரத்திற்கும் நான் மிகவும் கட்டுப்பட்டவனாக இருக்கின்றேன்; ஆகையால்-என்ன சொல்வேன், என் கண்ணே, நாவெழவில்லையே - போய்வருகிறேன். (போகிறான்)

காதேரின்:—இவன்பெருமையிற் பாதிகூட நான் இதுவரையில்தெரிந்துகொண்டதில்லை. இவனைவெல்

வதற்காக நான் பூண்டிருக்கும் வேடத்தை இன்னும் சிறிதுநேரம் தாங்கியே யிருக்கவேண்டும். இதற்கிடை யில் உண்மையைச் சொல்லி என் தந்தையைத்தெளி விப்பேனுனல், அவர் சிரித்துச்சிரித்து இவனைப் போக விடாமல் தடுக்கலாம்.

(போகிருள்)

# ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

## IV. ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஸ்தோத்திரங்கள்.

[382-வது பக்கத் தொடர்ச்சி]

5. இராகம்—புந்நாகவராளி] [தாளம்—சதுரச்ரரூபகம்.

பல்லவி

ஏநோமு நோசிதிமோ செலுல— ஏதாந மொஸகிதிமோ..............(ஏநோமு)

அனுபல்லவி

ஸ்ரீநாது கொலுவமரே செலுல—செக்கிள்ளு கொத்துசுநு
மாநக மோவாநுசு சந்த்—ராநநு ஹ்ருதயா நநும்ச..................(நேநோமு)

சரணங்கள்

1. ஸ்த்ரீரத்நமுலு மநமு செலுல—காமிஞ்சு யௌவனமு
வாரிஜ லோசநுடு செலுல—பாலாயெகதவம்ம
கோரிக லீடேரநு யது—வீருநி கநுலாரஜூட.........................(நேநோமு)

2. பங்காரு ஸொம்முலநு செலுல—பாகுக பட்டுகொநி
ச்ருங்காராம்பரமுலநு செலுல—செலுவொந்த கட்டுகொநி
ஸங்கதிகாநங்கமுலு சுபாங்குநிகி யொஸங்கக மந..................(மேநோமு)

3. பொங்காருநீ நதிலோ செலுல—பொந்துகா குமிகூடி
மங்களாகா ருநிதோ செலுல—மநஸார கூடிதிமி
ரங்கபதி யுப்பொங்குசுமந செங்கடுநு ஜெலங்கக.....................(நேநோமு)

4. வாகீசாத்யமருலகு செலுல—வர்ணிம்ப தரமௌநு
த்யாகராஜாப்துநிதோ செலுல—போகமு லந்துசுநு
பாகுக தமிரேககநு நய—ராகமுலீ லாகு பாட........................(நேநோமு)

அர்த்தம்

செலுல - சகோதரிகளே! ஏ நோமு நோசிதிமோ - என்னவிதமான நோன்புகள் நோற்றேமோ? ஏதாந மொஸகிதிமோ - என்னவிதமான தானங்களைச்செய்தோமோ?

ஸ்ரீ நாது கொலுவமரே - லக்ஷ்மீநாயகனுன ஸ்ரீ க்ருஷ்ணன் கொலுவமர்ந்திருந்தது, செக்கிள்ளு கொத்துசுநு - கபோலங்கள் பார்த்தானந்தித்து முத்தமிட்டுக்கொள்ளும் படி விளங்க, மாநக - தவறாமல், மோவாநுசு - அழகிய செவ்வாயையும், சந்த்ராநநு - சந்திரன்போன்ற முகத்தையும், ஹ்ருதயா நநும்ச - நம் இருதயகமலத்தில் வைத்து ரமிக்கும்படி,(ஏநொமுநோசிதிமோ-என்னநோன்பு நோற்றேமோ ?)

ஸ்த்ரீரத்நமுல மநமு - வநிதாரத்னங்களாகிய நாம், காமிஞ்சு யௌவநமு - விரும்புகின்ற யௌவனம், வாரிஜ லோசநுடு பாலா யேகதவம்ம - தாமரைக்கண்ணனுன ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் பால் ஈடுபட்டதல்லவா? யது வீருநி - யாதவகுல வீரனுன அவனை, கநுலாரஜூட - கண்களால் ஆநந்தமாய்ப் பார்க்க, கோரிகலு ஈடேரனு - நம்முடைய கோரிக்கைகளனைத்தும் ஈடேறிவிட்டன; (இதற்கு, ஏநோமு நோசிதிமோ - என்ன நோன்பு நோற்றேமோ ?)

பங்காரு ஸொம்முலனு - திவ்யமான ஆபரணங்களை, பாகுக பெட்டுகொநி - நன்றாக அணிந்துகொண்டு, ச்ருங்காராம்பரமுலனு - அழகிய சேலைகளை, செலுவொந்த கட்டுகொநி - சிறப்பாகக் கட்டிக்கொண்டு, ஸங்கதிகாநு-நல்ல மார்க்கத்தில், அங்கமுலு-நமது தேகத்தை, சுபாங்குநிகி ஒஸங்கக் - திவ்விய மங்களரூபனுன ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்விடம் ஒப்புவித்துவிட, மநமு - நாம், (ஏநோமு நோசிதிமோ - என்ன நேன்பு நோற்றேமோ ?)

பொங்காரு நீ நதிலே - பொங்கிப்பாயும் இந்த(யமுனா) நதியில், பொந்துகா குமிகூடி - அழகாக நாம்கும்பல்கூடி, மங்களாகாருநிதோ - திவ்வியமங்களரூபனுன ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவோடு, மநஸாரகூடிதிமி-மனப்பூர்வமாய்க்கூடி விளையாடினேம்; ரங்கபதி - (ப்ரபஞ்ச நாடகத்தைநடத்தி வைக்கும்) அப்பெருமான், உப்பொங்குசு - மனமகிழ்ந்து, செங்கடுநு ஜெலங்கக - நம்முடன் கூடி விளங்குவதற்கு (ஏநோமுநோசிதிமோ-என்னநோன்பு நோற்றேமோ ?

வாகீசாத்யமருலகு - வாகீசன் முதலான தேவதைகளுக்குங்கூட, வர்ணிம்ப தரமௌநா - (நம்முடையபாக்கியத்தை இன்னதென்று விவரித்துரைக்கத் தரமாகுமா ? த்யாகராஜப்துநிதோ - தியாகராஜனுக்கு ஆப்தனுன அந்தக் கிருஷ்ணபரமாத்மாவுடன், போகமுலந்துசுநு - போகங்களை அநுபவித்துக்கொண்டு, பாகுக - நன்ருக, தமிரேககநு - உற்சாகம் மிகுதிப்படும்படி, நயராகமுலு - நயமான ராகங்களை, ஈலாகுபாடக் - இவ்வாறு பாடுவதற்கு, (ஏநோமு நோசிதிமோ-என்ன நோன்பு செய்தோமோ?)

[குறிப்பு:—இக்கீர்த்தனமும் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் இயற்றிய நௌகா சரித்திரக் கீர்த்தனையிலுள்ளது. ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவோடு கூடியாடிச் சுகித்த கோபிகா ஸ்த்ரீகள் தம்முடைய பாக்கியத்தைப்பற்றித் தமக்குள்ளேயே கூறிக்கொள்ளும் பான்மையில் இக்கீர்த்தனம் அமைந்துள்ளது. மிகவும் அழகிய கருத்துக்களும் அழகிய வர்ணமெட்டும் உள்ளதாய் அறிஞர் மனத்தைக் கவரவல்ல தன்மையுடையதாய் இது இருக்கின்றது.]



இந்தக் கீர்த்தனையின் ஸாஹித்ய பாடம் சுத்தமாகக் கிடைக்காததனுல், இதில் சில சிறிய திருத்தங்களை அறிவுடையார் உதவிகொண்டு செய்விக்க நேர்ந்திருக்கின்றது என்பதை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

புந்நாகவராளி ராக லக்ஷணம்.

ஸ்ரீகிருஷ்ண ஸ்தோத்திரமான "ஹரிஹரி நீயொக்க" என்ற கீர்த்தனையின் குறிப்பில் (355 பக்கம்) இந்த ராக லக்ஷணத்தைக் காண்க.

### ஸ்வர ஸாஹித்யம்

ஸம்ஜ்ஞா விவரணம்

, — இது ஒரு களையைக் காட்டுகிறது.
; — இது இரண்டு களைகளைக் காட்டுகிறது.
| — இது தாளத்தின் மத்தியிலுள்ள தட்டுக்களைக் குறிப்பிடுகிறது.
|| — இது தாள ஆவர்த்த முடிவைக் காட்டுகிறது.
* — இது பாட்டுத் தொடங்கு மிடத்தைக் குறிப்பிடுகிறது.

ஸரிகம— பாட்டின் நடை எந்தக்காலத்தில் உள்ளதோ அதன் நடுவில் துரிதகால ஸங்கதி வருமிடங்களில் இவ்வாறு கீழ்க்கோடிடப்பட்டிருக்கும்.
ஸரிகம— மேற்படி ஸம்ஜ்ஞையிற் கூறப்பட்டிருக்கும் துரிதகாலத்துக்கும் துரிதமான காலத்தை இந்த இரட்டைக் கீழ்க்கோடு குறிக்கும்.
பதநி—தடித்த எழுத்தில் உள்ள ஸ்வரங்கள் கீழ் ஸ்தாயியைக் குறிப்பிடும்.
ஸ்ரீகம்—மேலே புள்ளியுள்ள ஸ்வரங்கள் மேல் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

குறிப்பு:—இக்கீர்த்தனம் மத்யம காலத்திற் பாடப்படவேண்டும்.

பல்லவி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ; * ஸரி | கா ; ரீ ஸா | ஸாரீ | நீ; - ஸாஸா | ஸா - பா | பா; ; பா | பம கா | கா ரீ ஸா ; |
| ; * ஏ . | நோ; முநோ | சிதி | மோ;-செலு | ல - ஏ | தா; ; ந | மொ . ஸ | கி தி மோ ; |
| நீ* ஸரி | கா ; ரீ ஸா | ஸாரீ | ரிஸநீ-ஸாஸா | ஸா - பா | பா; ; பா | பம கா | கா ரீ ஸா ; |
| . * ஏ . | நோ; முநோ | சிதி | மோ;-செலு | ல - ஏ | தா; ; ந | மொ . ஸ | கி தி மோ ; |
| நீ* ஸரி | கா ; ரீ ஸா | ஸாரீ | ரிஸநீ-ஸாஸா | ஸா - பா | நீ ;தா பா | பமகா | கா ரீ ஸா ; |
| . * ஏ . | நோ; முநோ | சிதி | மோ..-செலு | ல - ஏ | தா; . ந | மொ.ஸ | கி தி மோ ; |

(ஏநோமு)

அனுபல்லவி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ; * பா | பா; பா பா | பமகா | ரீ ஸா ஸா நீ | ஸா-பா | மா;-பாபா | பமகா | கா ரீ ஸா ; |
| ; * ஸ்ரீ | நா; து கொ | லு-வ | மரே - செலு | ல-செக் | கிள்;-ளு . | கொ.த் | து சு நு ; |
| ; * பா | பா பா பா; | நீ நீ | தா பாபா ; | பாமா | தாபா-பாபா | பா ; | மாகா ரீஸா |
| ; * மா | ந க மோ; | வா . | நு சு சந் ; | த்ரா . | நநு-ஹ்ருத | யா ; | ந நும் . ச |

(ஏநோமு)

சரணம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ; * ஸரி | காரீ; ஸா | ஸாரீ | ரீரீ - ஸா நீ | ஸா-ஸரி | கா ரீ ஸா நீ | ஸா நீ | ஸா ; ஸா; |
| ; * வா . | கீ சா;த்ய | மரு | லகு - செலு | ல -வர் . | ணிம் . ப . | தர . | மௌ; நா; |
| ; * பா | பா பா; பா | பாமா | காரீ - ஸா நீ | ஸா-ஸரி | கா மாபா ; | பாமா | கா மா பா; |
| ; * த்யா | க ரா; ஜாப் | து நி | தோ. - செலு | ல-போ. | க முலந் ; | து . | சு . நு ; |
| பா ; | பா பாபாபா | நீ ; | தாபா-பாமா | பா-பம | தாபாபாபா | பா ; | மாகாரீஸா |
| பா ; | கு க த மி | ரே ; | க க - நு ந | ய -ரா. | க மு லீ . | லா ; | கு பா . ட |

(ஏநோமு)

மற்ற சரணங்களையும் இதைப் போலவே பாடவேண்டும்.

## தமிழ்ப்பாடம் 127.

### நைடதம்—நளன்தூதுப் படலம்

[405-வது பக்கத் தொடர்ச்சி]

கொய்யுளை வயப்புரவி கோடி யுழைபோத
மையன்மத வாரண மருங்குற நெருங்க
வெய்யதிறல் வாளுழவர் வேலை புடைசூழ
மொய்திரை யளக்கரி னியம்பல முழங்க 4.

(உரை) கொய்-கொய்த, உளை - பிடரிமயிருடைய, வயம்-வெற்றிபொருந்திய, புரவி-குதிரைகள், கோடி-ஒருகோடி, உழை-பக்கத்தில், போத - வரவும்; மையல்-மயக்கமுடைய,மதம்-மதங்கொண்ட,வாரணம்-யானைகள், மருங்கு - பக்கத்தில், உற - மிகவும், நெருங்க - நெருங்கவும்; வெய்ய - கொடிய, திறல் - வலிமையுடைய, வாள் உழவர் - வாளால்·பகைவர் உடல்களைஉழுகின்றவர்களாகிய போர்வீரர்களது, வேலை-கடலானது, புடை - தன் பக்கத்தில், சூழ - சூழவும்; மொய் - அடர்ந்த, திரை - அலைகளையுடைய, அளக்கரின் - கடலைப்போல, இயம் பல - பலவித வாத்தியங்கள், முழங்க - ஒலிக்கவும்—

விரிவுரை:—புறப்பட்ட நளன் வழிக்கொண்டவிதத்தை இதுவும் அடுத்த செய்யுளும் கூறுகின்றன. இதனில் உள்ள, போத நெருங்க சூழ முழங்க என்னும் வினையெச்சங்களும், அடுத்த செய்யுளில் உள்ள, கிழற்ற இரட்ட இறைஞ்ச என்னும் வினையெச்சங்களும், அச்செய்யுளில் உள்ள 'போனன்' என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிகின்றன. இந்த இரண்டு செய்யுள்களும் குளகம்.

குறிப்பு:—வெய்யதிறல்,—குறிப்புப் பெயரெச்சத் தொடர், ஆதலால் வல்லினம் மிகவில்லை. (7-339). 'மொய்திரை' என்பது வினைத்தொகை யாகையால் வல்லினமெய் மிகவில்லை.

199177

82
M21,N28KN
N34.7.27

அளக்கரின்-ஐந்தாம் வேற்றுமை ஒப்புப்பொருள். உழைபோத, புடைசூழ, என்பன ஏழாம் வேற்றுமைத் தொகைகளாதலால் வல்லினமெய் மிகவில்லை.

---

விரிகதி ரெறிக்குமதி வெண்குடை நிழற்றத்
தரளநகை மாதர்பலர் சாமரை யிரட்ட
எரிமணி யிமைக்குமுடி மன்னவ ரிறைஞ்சத்
திருவளரு மார்பனுயர் தேரின்மிசை போனான். 5.

(உரை) விரி - விரிகின்ற, கதிர் - கிரணங்களை, எறிக்கும் - வீசுகின்ற, மதி - சந்திரன்போன்ற, வெண்-வெண்மையான, குடை - குடையானது, நிழற்ற - நிழல் கொடுக்கவும்; தரளம் - முத்தைப் போன்ற, நகை - பற்களையுடைய, மாதர்பலர் - மாதர்கள் பலர், சாமரை - கவரியை, இரட்ட - இருபுறத்திலும் வீசவும்; எரி - நெருப்பைப் போன்ற, மணி - மாணிக்கங்கள், இமைக்கும் - ஒளிவீசும், முடி - கிரீடங்களை அணிந்த, மன்னவர் - அரசர்கள், இறைஞ்ச - வணங்கி வழியனுப்பவும், திரு வளரும் - இலக்குமி தங்கிய, மார்பன் - மார்பையுடைய நளன், உயர் - உயர்ந்த, தேரின்மிசை - தேரின்மேல், போனான் - சென்றான்.

குறிப்பு:-விரிகதிர், உயர்தேர், வினைத்தொகைகளாதலால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை. நிழற்றத் தரளம், இறைஞ்சத் திரு — வினையெச்சங்களுக்குப்பின் வருமொழிமுதல் வல்லின மிகுந்தன.

---

தேர்நடவு கம்பலை செவிப்புகுத லோடும்
வார்கடன்முழக்கொலி கொலோமழை முழக்கோ
சார்வதென வையமுறும் வானவர்க டம்முன்
ஏர்கெழுமு மாடநிட தத்திறை யெதிர்ந்தான் 6.

(உரை) தேர் - தேரை, நடவு - நடத்துகின்ற, கம்பலை - பேரொலியானது, செவிப் புகுதலோடும் - காதிற்பட்டவுடன், சார்வது - வருகின்ற இது, வார்-நீண்ட, கடல்-கடலானது, முழக்கு ஒலிகொலோ - முழங்குகின்ற ஒலியோ (அல்லது),மழை முழக்கோ-மேகத்தின் ஒலியோ, என - என்று, ஐயம் உறும்-சந்தேகப்படுகின்ற, வானவர்கள்தம் முன் - (நாரதர் தூண்டியபடி தமயந்தியின் சுயம்வரத்திற்குப் பூமியில் வருவரான தேவர்களுக்குமுன்னே, ஏர்-அழகு, கெழுமு-நிரம்பிய,மாடம்-மாளிகைகளையுடைய, நிடதத்து - நிடததேசத்திற்கு, இறை-அரசனான நளன், எதிர்ந்தான் - எதிர்ப்பட்டான்.

குறிப்பு:—செவிப்புகுதல், செவியில் புகுதல் என விரியும், ஆகையால் ஏழாம்வேற்றுமைத் தொகை. ஏழாம் வேற்றுமைத் தொகையில் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாமற் புணர்வதே பொதுவிதியாயினும், 'செவி' என்னுஞ் சொல்லோடு சேர்ந்து வருகின்ற ஏழாம்வேற்றுமைத்தொகைகளில் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தே புணர்வதை நூல்களிற் பயின்றுவரக் காண்கிறோம்.

---

பொற்றடந் தேர்மிசைப் பொலிந்து தோன்றிய
மற்றடந் தோளினன் வனப்பு நோக்கின
ருற்றதோர் வியப்பினுக் குள்ள மீந்துதாம்
வெற்றுடம் பாயினர் விண்ணு ளோரெலாம். 7.

(உரை)விண் உளோர் எலாம் - விண் உலகத்தவராகிய இந்திரன்முதலிய நான்கு தேவர்களும், பொன் தட தேர்மிசை - பொன்னாற் செய்த பெரிய தேரின்மேல், பொலிந்துதோன்றிய-பிரகாசத்துடன் காணப்பட்ட, மல் தட தோளினன் - வலிமை பொருந்திய பெரிய தோள்களையுடைய நளவேந்தனது, வனப்பு - அழகை, நோக்கினர் - பார்த்தார். (பார்த்து)உற்றது ஓர் வியப்பினுக்கு - உண்டான ஒரு ஆச்சரியத்திற்கு, உள்ளம் ஈந்து-தம் மனதைக் கொடுத்துவிட்டு, தாம்-தேவர்கள், வெறு உடம்பு ஆயினர்-வெறும் உடம்பு மாத்திரமே உடையவர்கள் ஆனார்.

கருத்து:-நளன் தன்பரிவாரங்களுடன் தேரில்வந்த பேரொலி செவிக்கெட்டியதும், "என்னவோ இது" என்று ஐயமுற்றிருந்ததேவர்களுக்குமுன் அவ்வொலியைத் தொடர்ந்து, மிகவும் பொலிகின்ற அழகு வாய்ந்த நளனே தோன்ற, "இப்படியும் அழகுடைய ஒருவன் இருக்கக்கூடுமோ" என்ற ஆச்சரியமானது அத்தேவர்கள் கருத்தையெல்லாம் கவர்ந்துகொண்டு அகன்றுவிடவே அவர் தங்நினைவற்ற உடலினராய் நின்றனர்.

குறிப்பு:—இதுவரைக் கற்றுள புணரிலக்கணத்தை இந்தச் செய்யுளில் பயிற்சிசெய்துகொள்ளலாம்:—

பொன் + தட = பொற்றட:- ஈரிடத்தும் மெய்நின்று புணர்கின்ற இதற்கு விதி இன்னும் கூறவில்லை.

தட + தேர் = தடந்தேர். தட என்பது அகரஈற்று உரிச்சொல். அகரஈற்று உரிச்சொல்லிற்குப்பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகும் என்பது பொதுவிதி (7—376). தட + கை = தடக்கை, என்று ஆகின்றது. ஆனால் தட என்னும் உரிச்சொல்லிற்குப் பின், வருமொழிமுதலில் ககரமெய் அல்லாது, சகர தகர பகர மெய்கள் வருமெனில், அந்த மெய்களை மிகாமல், அவ்வந்த வல்லின மெய்களுக்கு இனமாகிய ஞகர நகர மகர மெய்கள் முறையே மிகுந்து புணரக் காண்கின்றோம். தட + கை = தடக்கை என்று புணருமேனும், தட + செவி = தடஞ்செவி, தட + தோள் = தடந்தோள், தட + புயம் = தடம்புயம், என மெல்லெழுத்தே மிக்குப் புணர்கின்றன.

தேர்மிசை + பொலிந்து = தேர்மிசைப் பொலிந்து— இங்கு மிசை என்னும் ஏழாம்வேற்றுமை உருபிற்குப்பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்து புணர்ந்தது.

பொலிந்து + தோன்றிய = பொலிந்துதோன்றிய— வினையெச்சத் தொடரில் வல்லினமெய் மிகும் என்பது பொதுவிதி யாயினும், நிலைமொழி வன்றொடரல்லாத மற்றக் குற்றியலுகரங்களை ஈற்றிலுடைய வினையெச்சமாயின், வருமொழி முதல் வல்லினமெய் மிகாமல் இயல்பாகும்(7-339). பொலிந்து என்பதில் ஈற்றுக்கு அயலெழுத்து ந் என்னும் மெல்லினமெய் ஆகையால், ஈற்றிலுள்ள உகரம் மென்றொடர்க் குற்றியலுகரம். ஆகையால், வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை.

தோன்றிய + மல் = தோன்றியமல்-வருமொழிமுதல் மெல்லினமாகிய மகரமெய் நிலைமொழியீற்று உயிரோடு இயல்பாகப் புணர்ந்தது. (7—69)

மல் + தட = மற்றட = இன்னும் விதி கூறவில்லை

தட + தோள் = தடந்தோள்-தடந்தேர்என்றதுபோல நகரமெய் மிகுந்தது.



தோளினன் + வனப்பு = தோளினன் வனப்பு—இன்னும் விதி கூறவில்லை.

வனப்பு + நோக்கினர் = வனப்பு நோக்கினர்—வருமொழிமுதலில் நகரமெய் (மெல்லினம்) வர, அது நிலைமொழியிறுதி உயிரோடு இயல்பாய்ப் புணர்ந்தது. (7—69).

நோக்கினர் + உற்றது = நோக்கினருற்றது- நிலைமொழியிறுதி மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறிப் புணர்ந்தது (6—575).

உற்றது + ஓர் = உற்றதோர்—நிலைமொழியீற்றுக் குற்றியலுகரங் கெட்டு நின்ற மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறிப் புணர்ந்தது. (6-859)

ஓர் + வியப்பினுக்கு = ஓர் வியப்பினுக்கு— விதி இன்னும் கூறவில்லை.

வியப்பினுக்கு + உள்ளம் = வியப்பினுக் குள்ளம்-குற்றியலுகரம் கெட்டு நின்ற நிலைமொழியீற்று மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது (6—859).

உள்ளம் + ஈந்து = உள்ளமீந்து—நிலைமொழி ஈற்று மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது. (6—575)

ஈந்து + தாம் = ஈந்துதாம்—மென்றொடர்க்குற்றியலுகர ஈற்று வினையெச்சத்திற்குப்பின் வருமொழி முதல் வல்லினமெய் இயல்பாயிற்று (7—339)

தாம் + வெற்றுடம்பு = தாம்வெற்றுடம்பு-விதிஇன்னும் கூறவில்லை.

வெறுமை + உடம்பு = வெற்றுடம்பு—நிலைமொழி பண்புச்சொல்லாயிருக்குமாயின், அது எவ்வித விகாரங்களை யடையுமென்கிற விதிகளை இன்னுங் கூறவில்லை.

உடம்பு + ஆயினர் = உடம்பாயினர்-நிலைமொழியீற்றுக் குற்றியலுகரங் கெட்டு நின்ற மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது. (6-859)

ஆயினர் + விண் = ஆயினர்விண்—இன்னும் விதிகூறவில்லை.

விண் + உளோர் = விண் + ண் + உளோர் = விண்ணுளோர்—நிலைமொழி தனிக்குறிலை யணைந்த மெய்யை ஈற்றிலுடைய இரண்டெழுத்துச்சொல்லாதலால், அவ் வீற்றுமெய் விரிந்து வருமொழிமுதல் உயிரை ஏற்றது (6-599).

உளோர் + எலாம் = உளோரெலாம்—நிலைமொழியீற்று மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது (6—575).

---

## இலக்கணம்.

நிலைமொழியீறு வருமொழிமுதல் ஈரிடத்தும்உயிராகவும், நிலைமொழியிறுதியில் உயிரும் வருமொழி முதலில் மெய்யுமாகவும், நின்றுபுணர்கின்ற விதிகளை இதுகாறும் கற்கலானோம். இனி, நிலைமொழியிறுதி வருமொழிமுதல் ஆகிய ஈரிடத்தும் மெய்யே நின்று புணர்கின்ற விதிகளைக் கற்றல் வேண்டும். கல் + சட்டி, என்பதில் நிலைமொழி யிறுதியில் ல் என்னும் மெய்யெழுத்தே யிருக்கின்றது. ஆனால் வருமொழி முதலில் இருக்கும் ச என்பது உயிர்மெய்யெழுத்தே ஒழிய ச் என்னும் மெய்யெழுத்தன்று. ஆயினும், அவ் வுயிர்மெய்யெழுத்தினொலியின்முதலில் ஒலிப்பது ச் என்னும் மெய்யின் ஒலியேயாகையால், வருமொழிமுதலில் மெய் வந்திருக்கின்றதென்று சொல்கிறோம். இவ்விடயம் முன் (6-665, 695)விரிவாக உரைக்கப்பெற்றிருக்கின்றது.

க், ங் என்ற வரிசை மெய்கள் பதினெட்டு. இவைகளில் க் ச் ட் த் ப் ற் என்ற வல்லினமெய்கள் ஆறும், ங் என்ற மெல்லின மெய் ஒன்றும் ஆக இந்த ஏழு மெய்யெழுத்துக்கள் தமிழ்வழக்கில் மொழிக்குஇறுதியில் வரா. எனவே மொழிக்கு இறுதியில் வரக்கூடிய மெய்யெழுத்துக்கள் ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள் என்னும் இப்பதினொன்றே. இவைகளில் ஞ் ந் வ், என்னும் இம்மூன்று எழுத்துக்களை இறுதியில் உடைய சொற்கள் மிக அருமை:—(உரிஞ் - உராய்தல், வெரிந் - முதுகு, தெவ் - பகை).

ய் ர் ழ் என்ற மூன்று மெய்யெழுத்துக்களையும் ஈற்றிலுடைய சொற்கள் உயிரீற்றுச் சொற்களைஒப்ப நின்று வருமொழிமுதல் வல்லினமெய் புணர்வதால் (7-133) அவைகளுக்குரிய விதிகள் முன்னரே கூறி முடியலாயின.

இனி, மொழிக்கு முதலில் வரக்கூடிய் மெய்யெழுத்துக்கள் க் ச் த் ந் ப் ம் ய் ஞ் ங், என்னுமிப் பத்தே. ட் ற் ண் ன் ழ் ள் ர், என்ற இம்மெய்களோடு சேர்ந்து ஆன உயிர்மெய் எழுத்து ஒன்றும் மொழிக்கு முதலில்வராது. மொழிக்கு முதலில்வரக்கூடிய மெய்யெழுத்துக்களில், க ச த ப, என்னும் நான்கும் வல்லினம்; ஞ ங ந ம என்னும் நான்கும் மெல்லினம்; ய வ என்னும் இரண்டும் இடையினம்.

மெய்யீற்றுப்புணர்ச்சியில், நிலைமொழியின் ஈற்றில் எந்த மெய்யெழுத்து இருக்கின்ற தென்பதையும், வருமொழிமுதலில் எந்த மெய் நிற்கின்றதென்பதையும், நிலைமொழியும் வருமொழியும் என்ன தொடராகின்றன என்பதையும் நோக்கி, விதிகளை உணர்ந்து கற்க வேண்டும்.—

### A வருமொழி முதலில் யகரமெய் வருதல்.

I நிலைமொழி யீற்றில் யகர மெய்யைத்தவிர வேறு எந்த மெய்யெழுத்து நிற்பினும், வருமொழிமுதலில் யகரமெய் வருமானால் அவை புணருங்கால்,எல்லாத் தொடரிலும் இகரம் தோன்றலாம்.

உரிஞ் + யானை = உரிஞ் + இ + யானை = உரிஞி[யானை.
மண் + யானை = மண்ணியானை.
வெரிந் + யானை = வெரிநியானை.
நம் + யானை = நம்மியானை.
சொன்னேன் + யான் = சொன்னேனியான்.
புகர் + யானை = புகரியானை.
கல் + யானை = கல்லியானை.
தெவ் + யாவன் = (தெவ் + வ் + இ + யாவன்) தெவ்வியாவன்.
புகழ் + யாது = புகழியாது.
வேள் + யாவன் = வேளியாவன்.

குறிப்பு:—(1) இன்னபடி இகரம் பெற்றுத்தான் புணரவேண்டும் என்ற நியதியில்லை. செய்யுள்களில் ஒவ்வோரிடங்களில் இவ்வாறு புணர்ந்து, இகரம் தோன்றியிருக்கும். அப்பொழுது இவ்விதி நினைவிலிருந்தால் பதம் பிரிப்பது சுலபமாகும். உரைநடை வழக்கில், கல்யானை, மண்யானை, மகள்யாவள் என்று எழுதப்படுமேயன்றிக் கல்லியானை மண்ணியானை மகளியாவள் எனப் புணர்த்துவதில்லை.

குறிப்பு:-இந்த இகரம்வேறு, குற்றியலிகரம் வேறு. நிலைமொழியின் ஈற்றில் குற்றியலுகரமும் வருமொழி முதலில் யகரமும் வருமாயின், அக்குற்றியலுகரங் கெட,ஒருஇகரந்தோன்றிக்குற்றியலுகரம்விட்டகன்ற மெய்யின்மேல் ஏறும் என்றும்,இவ்விகரம்உயிர்க் குறிலிற்கு உரிய ஒரு மாத்திரையினின்று குறைந்து அரைமாத்திரை அளவே ஒலிக்கு மென்றும் முன் (3—70) கூறியிருக்கின்றோம். முரசு + யாது = முரசியாது. கோடு + யானை = கோட்டியானை.அவ்வாறின்றி இங்கு வருமொழியில் யகரம்வா நிலைமொழி யீற்று மெய்யோடு புணருங்கால் தோன்றும் இந்த இகரம் ஒருமாத்திரையே கொண்டொலிப்பதாகும். அத்து, இன், உ என்பனபோல்,இந்தஇகரமும்ஒருசாரியை.

(II) நிலைமொழியிறுதியிலும் யகரமெய்யே இருக்குமானல் வருமொழிமுதலில் யகரமெய் வர இகரம் தோன்றாது. நிலைமொழியீறு வருமொழிமுதல் ஆகிய ஈரிடத்தும் யகரமெய் வருமாயின் அவை புணரும் விதிகள் வருமாறு:—

(a) நிலைமொழி யகரமெய்யில் முடிகின்ற ஈரெழுத்துச் சொல்லாய், முதலெழுத்தும் குறிலாக இருக்க, வருமொழிமுதலும் யகரமெய்யாயின், நிலைமொழியும் வருமொழியும் எந்தத் தொடரானாலும், யாதும் விகாரமின்றி இயல்பாய்ப் புணரும்.

பொய் + யாது = பொய்யாது.
மெய் + யாது = மெய்யாது.
மெய் + யாப்பு = மெய்யாப்பு.

(b) நிலைமொழி யீற்றிலுள்ள யகரமெய்க்கு ஆயலெழுத்துக் குறிலாக அல்லாமல் நெடிலாக இருக்குமாயின், வருமொழி முதலில்யகரம் வர, நிலைமொழி யீற்றிலிருந்த யகரமெய்,—எல்லாத் தொடர்களிலும் கெட்டுவிடும்.

தாய் + யாவள் = தா + யாவள் = தாயாவள்.
நோய் + யானை = நோ + யானை = நோயானை.
கோநாய் + யாது = கோநாயாது.

குறிப்பு:—தனிக்குறிலைச் சாராத யகரத்தின்முன் யகரம் வரின் எத்தொடரினும் நிலைமொழி யிறுதி யகரமெய் கெடும்; நிலைமொழி யீற்றுமெய் எதுவாயினும் வருமொழி முதலில் யகரமெய்வருமானல் இயல்பாகவேபுணரும்; என்றுகொள்ளலாம்.

# மதுரைக் கோவை

[415-வது பக்கத் தொடர்ச்சி]

## IV பரத்தையிற் பிரிவு.

### கண்டோர் கூறல்

தாக்கும் பரிநெடுந் தேர்ச்சொக்கர் கூடற்
றெருகெடல்மண்
புரக்குந் தலைவர் புகுந்தன ராகம்
பொருதுகரை
பரக்கும் புதுப்புனல் கண்டெதி ரேறு
பனிக்கயல்போல்
வரக்குங் குமமுலை யாரணி கோலி
வளைந்தனரே. 327.

### தோழி தலைவியைப் புகழ்தல்

விற்போர் வலவன் கொடுமைதன் னேவல்
விடாமலொன்றாய்
நிற்போ மையுமறி யாதொளித் தாள்வெள்ளை
நீறணிந்து
மற்போ தருபுயத் தார்சொக்க நாதர்
மதுரைவல்லி
கற்போ வவனளி யோபொறை யோகரை
காண்கரியே. 328.

### கூடரோடு புலம்பல்

சிலைகாடு தோளண்ண லோடுசெந் தீவலஞ்
செய்யுமந்தத்
தலைநாளில் நீயொரு சான்றல்ல வோவெண்
டாளநிலாக்
கலைகாண் மதியர் கடம்பா டவியிற்
கலந்தகலப்
பொலகாண் மணிவிளக் கேவிலக் காது
பொருந்திலையே. 329.

### இறைவன் பரத்தமைக் கிரங்கல்

நறுமாந் தழையென்ன மேனிமுத் தாநகை
யென்னவனப்
புறுமாண் டகைசெய்த மாயமெல் லாமமு
வோடுகொண்ட
சிறுமான் கரத்தர் திருவால வாயிற்
றெளிந்துமெய்யென்
றிறுமாந் திருப்பவ ராரெனைப் போலவொ
ரேழையரே. 330.

### கனவுகண் டழுங்கல்

தோடிற் பொலியு மதுமாலை யஞ்சடைச்
சொக்கர்நன்னாட்
டேடிற் பொலிதொங்கல் மார்பமென் கோனல்க
வின்றுதுயில்
கூடிக் கருணைசெய் தீர்விழி காள்பயங்
கொள்ளுமுன்னே
யூடிக் கெடுத்துவிட் டேனிது வோமுன்னை
யூழ்வினையே. 331.

### தோழி தலைவனை இயற்பழித்தல்

ஆகம் பராயிருப் பாரால வாயில்நம்
மன்பரின்பம்
போகம் பொருதளிக் குந்திரு மார்பம்
புணரவென்று
தாகம் பொருதிருப் பார்க்கரி தாகித்
தனதளவும்
மோகம் பொருதிருப் பார்க்கெளி தாய்வர
முன்னின்றதே. 332.

### தலைவி இயற்பட மொழிதல்

எண்ணுங் கனவு நனவுமொன் றாக
விளமுலையுங்
கண்ணு மனமுங் கலந்தக லார்கற்ப
காடவியு
மண்ணும் புகழும் பிரான்மது ராபுரி
வல்லியவர்
நண்ணும் பழுதள தோவவற் கேபழி
நான்சொல்வதே. 333.



### தலைவன் தலைவியை நினைதல்.

அனமா யிளமயி லாயரங் காடு
மரிவையர்பொற்
றனமார் படங்கத் தழுவுநெஞ் சேசலங்
கொண்டெழுந்த
கனமா களத்தர் கடம்பா டவிமனைக்
கற்பொடுநம்
மனமா ளிகையிருப் பாரென்செய் வாரிந்த
வஞ்சனைக்கே. 334

### தலைவன் றோழியை வாயில் வேண்டல்

விள்ளா மயல்கொண் டளியாது நீயன்று
மீட்டவென
துள்ளா ருயிர்க்குயிர் வேறுமுண் டோபிறை
யோடலர்ந்த
கள்ளாவி யங்கொன்றை யார்கடம் பாடவிக்
கன்னியினம்
புள்ளா ரலங்கலங் கோதையல் லாலொரு
போதெமக்கே. 335.

### தோழி வாயின் மறுத்தல்.

தெளியுங் கலவி யமுந்திய நாளன்பு
சென்றுநெஞ்சு
சுளியுங் கருங்கங்கு லும்பக லானது
சூடரவும்
அளியுஞ் சுழல்கொன்றை யாரால வாயினம்
மன்பர்க்கின்று
வெளியுங் கருங்கங்கு லாய்விட்ட வாமெள்ள
மெள்ளவந்தே. 336.

### தோழி தலைவியை வாயி னேர்வித்தல்

வாட்...மகுடா டவித்தொங்கல்
வாசமருத்
தாட்டா மரைமலர் தானல்ல வோமதத்
தாரையறுக்
கோட்டானை யாலயத் தார்கூடல் வாயுன்
கொழுங்கடையிற்
றோட்டாழங் ... ... ...
துவளுவதே. 337.

### தலைவி வாயினேர்தல்

வாதுக் கிணங்குந் தமிழ்வையை நாடர்
மதுரைநண்பர்
சூதுக் கிணங்கும தோநெஞ்ச மேவிடந்
தோய்க்திரண்டு
காதுக் கிணங்கு விழிமாத ருண்டு
களித்தவின்பக்
கோதுக்கு நாமிருந் தாலிது வோவந்து
கூடுவதே. 338.

### தலைவி தலைவனோடு ஊடியுரைத்தல்

பொன்னிற் கலவி சிறப்ப ரிளமுலைப்
போகமுண்பாற்
கென்னிற் கலவி யிணங்கு மதோமது
ரேசரெங்கள்
கன்னித் துறைவர்க டம்பா டவிவள்ளல்
காதலித்துன்
சென்னிக் கணிவதெல் லாமவர் தாமரைச்
சீறடியே. 339.

வாக்குந் துணிவு மளவும் பரவியல்
வாணர்தெள்ளிக்
கோக்குந் தமிழ்புனை வார்கூட லுடர்பொற்
குன்றிலின்பந்
தேக்கும் பருவ மறிந்திது காலந்
தெளிவித்தெம்மைக்
காக்குங் கடவு ளழிக்குமென் றாலெவர்
காப்பவரே 340.

### கலந்துழி மகிழ்தல்

துன்றுங் குழலி யனுராக போகந்
தொலைவறநா
மன்றுந் தெளிந்தன மேமன மேவெள்ளி
யம்பலமுங்
குன்றும் புகுந்து குடியிருப் பார்தமிழ்க்
கூடலின்ப
மின்றுந் தெளிந்தன மேயின்ன மேதென்
றியம்புவதே. 341.

### விருந்தொடு வந்தமைகண்டு ஆறிய தலைவியைக் கண்டோர் கூறல்

மருந்தாய்ப் பிறவி தவிர்த்தபொற் றாளர்
மதுரையிற்செம்
பருந்தார்க்கும் வேலன் வரவுகண் டாள்முகம்
பார்த்தொருவ
ரிருந்தாற் றெரியவெங் கோபா னலம்விருந்
தென்னுமந்த
வருந்தாப் புனல்கண் டவிந்தது காணு
மருந்துதிக்கே. 342.

### புதல்வனொடு வந்தமை தோழி தெளிவித்தல்

கோடாத கோல்கொண்டு மண்புரப் பார்நங்
குலமணியைத்
தேடா வகலத் தணிதல்கண் டாய்செழுந்
தீவடிவில்
வாடா தணிகொன்றை யார்சொக்க நாதர்
மதுரையினீ
யூடா மருந்தல்ல வோவணங் கேயவ்
வொளிமணியே. 343.

### தலைவனை முனிதல்

அலைப்பாவை யஞ்சடை யாரால வாயெம்
மழகழிந்த
முலைப்பால் முடையுங் கலையுங்கண் டாய்கடை
முன்னர்நின்று
கொலைப்பால் விழியின் கொழுங்கடை யானலங்
கூறவிக்கும்
விலைப்பா வையர்செல்வ மேதொடு மேவெங்கள்
மேகலையே. 344.

## கலா நிலயம் முன்னைய வால்யூம்கள்.

1928, 1930, 1931, 1932, 1933 வருடத்திய வால்யூம்கள் வேண்டுவோர் உடனே பெற்றுக் கொள்வது நலம்.

வால்யூம் ஒவ்வொன்றின் விலை:—பைண்ட் செய்யாதது. ரூ. 7-8-0 ஆப் லெதர் கில்ட் பைண்ட் செய்தது. ரூ 9-0-0. தபால் அல்லது ரயில் கட்ட வேறு.

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

6-ம் பத்து. 8-ம் தசகம்.

[408-வது பக்கத் தொடர்ச்சி]

2-ம் பாசுரம்

*மையமர்வாள்நெடுங்கண்மங்கைமார்*
*முன்பென்*
*கையிருந்துநெய்யமரின்னடிசில்நிச்சல்*
*பாலொடுமேவீரோ*
*கையமர்சக்கரத்தென்கனிவாய்ப்*
*பெருமானைக்கண்டு*
*மெய்யமர்காதல்சொல்லிக்கிளிகாள்*
*விரைந்தோடிவந்தே.*

அவதாரிகை:—முன் பாசுரத்தில், மேல் கீழ் உலகங்களையும் பரிசாகக்கொடுத்தவள் இப்பாசுரத்தில், பகவானும் ஆதாவாய்ப் பற்றுகின்ற தம் திருக்கரங்களில் உட்கார்ந்து பாலுமின்னடிசிலுமுண்ணக் கிளிகளுக்கு இடந்தருகிறேன் என்கிருள். அஞ்சனம் எழுதி அலங்கரித்துகொண்ட கண்கள் திகழும் தன் ஸஹிகளோடு இக்கிளிகளும் பகவானிடத்திற்குத் தூதுபோய் வேகமாய் நல்வார்த்தை திரும்பிக்கொண்டு வந்தால் அவைகளும் தானும் ஏகரசமாய்ப்பாடி ஆடலாமென்கிருள். "மேவீரோ."-தயவுசெய்து ஆதரிக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்வதாம். இவர்கள் எல்லாரும் அழகு குரல் நடை உடை பாவனைகளில் பரம ரஸிகர்கள். பாட்டுக் குழாத்திற்கு ஸங்கீதமொன்றே குறைவு. அதற்கு இப்பிராட்டி ஒரு சூழ்ச்சி தன் மனத்தில் வைத்துப் பேசுகிருளென்பது ஆருயிரப்படி உரைகாரர் நிர்வாஹம். பாட்டுக் கற்பிக்கிறவள் பிராட்டி; கேட்டு ஆநந்திக்கிறவர்கள் தோழிமார்கள், கற்கும் பாட்டோ, பொன்மலர் நாற்றமுடைத்து என்கிற ரீதியாய், பகவானின் திருநாமங்கள்; ஒத்துப்பாடுபவர்கள் பிராட்டியும் தோழிமார்களும். சென்றதூதுக்குப் பகவானிடம் நல்ல விடைபெற்றுச் சீக்கிரம் திரும்பிவந்தால் மேல்கண்டபடி சங்கீத சபை கூடி ரமிக்கலாமென்று கிளிகளுக்குச் சொன்னபடி; அழைக்கிறபடியுமாம்;

பொழிப்புரை:—ஒரு தாமரையிலே ஒரு தாமரை பூத்தாற்போல் திருக்கையும் திருவாழியும் சேர்ந்திருக்கிறவழகாலும் திருவாழியைக்கண்ட பிரீதியாலே புதுக்கணித்த திருப்பவளத்தின் அழகாலும் என்னை அடிமையாக்கினவனழகைக்கண்டு அப் பெரும்பேற்றையடைந்ததின் பின்னர் அவனுக்கு உன்பக்கலுள்ள ஸ்நேகம் மெய்யானதென்று அவனுக்கு வற்புறுத்தி அவனருளிச்செய்யும் வார்த்தைகளை நான் முடிவதற்குமுன்னே விரைந்தோடிவந்தெனக்குச் சொல்லி என்னை உள்ளவளாகவாக்கி என்னுடைய தோழிமாரெல்லாரும் உங்களுடைய சந்தோஷத்தைக் கண்டு ஆசைப்படும்படி என் கையிலேயிருந்து அவன் திருநாமங்களை நான் கற்பிக்கக் கற்று வாழுங்கோளென்று தன் கிளிகளைநோக்கிச் சொல்லுகின்ருள்—ஆருயிரப்படி.

---

3-ம் பாசுரம்.

*ஓடிவந்தென்குழல்மேலொளிமாமலரூதீரோ*
*கூடியவண்டினங்காள்குருநாடுடையவர்கட்காய்*
*ஆடியமாநெடுந்தேர்படைநீறெழச்செற்றபிரான்*
*சூடியதண்டுளபமுண்ட தூமதுவாய்கள்கொண்டே.*

குறிப்புக்கள்:—ஆடிய மா நெடுந்தேர் - உற்சாகத்துடன்சஞ்சரிக்கும் குதிரைகள் பூட்டிய பெருந்தேரில்.

உரை:- குரு நாட்டை யாளவேண்டியவர்களாகிய பாண்டவர்கள் பக்கலுற்றவாத்ஸல்லியத்தாலே ஜாதி அசுவங்கள் பூட்டப்பட்ட உன்னதமான தேரிலேறி அவர்களுக்கு ஸாரதியாயிருந்து அவர்களின் விரோதிகளையும் அவர்களின் சேனைகளையும் செற்ற மஹாபிரபுவுக்கு மிகவும் பக்தியுள்ள திவ்விய ஜனங்கள் அந்த யுத்தத்தில் சைத்தியோபசாரமாகச் சூட்டிய துளப மாலைகளினின்று மதுவுண்ட தூய்மைபான வாயினுல், வண்டினங்களே, என் குழல்மேல் உள்ள ஒள்ளிய மலர்களை ஊத மாட்டீர்களோ! அப்படிச் செய்வீராளுல் அப்பூக்கள் மலர்ந்து என்னை யாச்வஸிக்கும். என் நிறமும் பண்டுபோலாகும். அவற்றின் தூய்மையால், விரஹத்தால் தூங்காத என் கண்களும், துயிலும் என்கிருள்.

---

4-ம் பாசுரம்.

*தூமதுவாய்கள்கொண்டுவந்தென்முல்லைகள்*
*மேல்தும்பிகாள்*
*பூமதுவுண்ணச்செல்லில்வினையேனைப்*
*பொய்செய்தகன்ற*
*மாமதுவார்தண்டுழாய்முடிவானவர்*
*கோனைக்கண்டு*
*யாமிதுவோதக்கவாறென்னவேண்டுங்*
*கண்டீர்நுங்கட்கே.*

அவதாரிகை:—சென்றபாசுரத்தில், பாரத யுத்தத்தில் ஜயசீலனுய் நின்ற கண்ணன் அணிந்திருந்த துளப மாலையிலிருந்த மதுவுண்ட வண்டுகளை வேண்டினவள் இப் பாசுரத்தில், யுத்த ஆரவாரத்தினிடையே வண்டுகள் அங்குச் செல்லவொண்ணுமோ வென்ற சங்கையால் தன்முல்லைக்கொடிகளில் ரஸித்துமதுவுண்ணும் தும்பிகளைக் கூப்பிட்டுத் திருநாட்டிலே அமரர்களோடு கலந்து ரஸித்துக்கொண்டிருக்கு மெம்பெருமானுக்குத் தூதுபோகவிடுகிருள். இவைகளுக்கு யாதொன்றும் பரிசு கொடுக்கவில்லையென்பது வெளிப்படை - அண்டை அயலில் இருப்பவர்கள் நேயர்கள் ஆகவேண்டும் அல்லவோ? மனிதராலுஞ்சரி தும்பிகளாலும்சரி அண்டையயல்காரர்கள் ஒப்புறவொழுகுதலி னிமித்தம் பரஸ்பரம் ஒத்தாசைசெய்யக் கடமைப்பட்டவர்களன்ருே? இக்கடமையை நிர்வஹிக்க என்னஹேதுவென்ருல் - இப்பிராட்டி வளர்க்கும் முல்லைக்கொடிகளிலிறங்கித்தும்பிகள் தினந்தினம்மதுவை உண்ணுகின்றன வல்லவோ? ஆகையால் தூது உவந்துசெல்லவேண்டும். மதுவாய்கள் உள்ளனவாதலால் சாதுரியமாய்ப் பேசவல்லனவென்பது திருவுள்ளம்.



உரை:-இப்பொழுது முல்லைக்கொடிகளி லிறங்குகின்றீர்கள். நான் விரஹத்தால் க்ஷீணித்துப்போனுல் முல்லைகளும் நீர்வார்த்து காப்பாரின்றி இறந்துபடும். அப்போது உங்களுக்கும் இழவாகும். ஆகையால் "கண்டீர்" தூது செல்வது உங்கள்பொருட்டுமாகும். நிச்சயமாய் அமரர் கூட்டத்தில் குழுமிரவிக்கும் பகவானுக்கு அவன் பிரிவால் யான் அத்தியந்தம் நோவுபடுவதை உணர்த்தி முன் என்னேடுசெய்த கலவியெல்லாம் பொய்யேபோல் தோன்றும்படி வெகு அல்ப காலமாயிருந்துவிட்டது. வேகமாக வருவோமென்று பொய்யை நிஜமாகவே நம்பும்படியான என்னை ஏமாற்றிவிட்டுப் போனதொழிய அருளேயோ காணேம். உம்மை யாசைப்பட்டு உம்மையே எதிர்பார்க்கும் ஒருத்தியை இவ்வண்ணம் விட்டுவிடுதல் தகுதியோவென்று அவன் ஸந்நிதியில் விண்ணப்பஞ் செய்யுங்கோள். எங்கள் பசிதாஹத்தை இம் முல்லைக்கொடிகளில் ஆற்றிக்கொள்ள வேண்டாமோவென்ருல் அங்குத் திருநாட்டில் அவன் திருக்குழலில் திருத்துழாயின் மதுவெவள்ளத்தைத் தூய்மையான வாய்கள்கொண்டு இஷ்டம்போல்பருகுங்கோள்; அங்குச்செல்வது உங்கள் பசிக்குமாயிற்று என்காரியத்துக்குமாயிற்று என்கிருள்.

---

5-ம் பாசுரம்

*நுங்கட்குயானுரைக்கேன்வம்மின்*
*யான்வளர்த்தகிளிகாள்*
*வெங்கட்புள்ளூர்ந்துவந்து*
*வினையேனைநெஞ்சங்கவர்ந்த*
*செங்கட்கருமுகிலைச்செய்யவாய்ச்*
*செழுங்கற்பகத்தை*
*எங்குஞ்சென்ருகிலுங்கண்டிதுவோ*
*தக்கவாறென்மினே.*

குறிப்பு:—இங்கே தூதுவிடும்பக்ஷி தான்வளர்க்கும் கிளிகளாதலால் பரிசு அளிக்க அவசியமில்லை. ஒரு பரிசும்தானமும்செய்யவில்லை. முன்பாசுரங்களில்வண்டுகளுக்குப் பாரதப்போர் நடக்கும்ஸ்தலத்தையும், தும்பிகளுக்குத் திருநாட்டையும் பகவானைக்காண யுக்தமான விடமென்றவள் யாதொரு விடமும் குறிக்காமல் கிளிகளைத் தூதனுப்புகின்ருள். அவன் கருடன் மேல்ஏறிவந்தஎன்னிடத்தில் ஸரஸமாய்க்கலவைசெய்தபோது நீங்களும் கூடவிருந்து அவனதுஉல்லாஸ விலாஸங்களை அனுபவித்தீர்களேகிளிகளே! ஆதலால் அவனை நீங்கள்நன்ருய் அறிவீர்களே, அவன் எத்தனை நாளாய் நம்மைவிட்டு நிராதரவு செய்திருக்கிருன், அவனை எங்குச் சென்ருகிலும் கண்டு எங்களைவிட்டு எங்கள் நினைவில்லாமல் திரிவது உமக்குத் தகுதியோவென்று எச்சரியுங்கோள்"—சென்ற பாசுரத்தில் அவன் செய்வது "தக்கதல்ல" என்றுசொல்லி "வேண்டுங்கள்" என்று தும்பிகளுக்குச்சொன்னவள்கிளிகளை, "தக்கதல்ல" வென்றுமாத்திரமிங்கு எச்சரிக்கச் சொல்கின்ருள். எங்கேயிருந்தாலும் சென்றுவர உத்தரவுகொடுத்து அனுப்புகிருள். செங்கண்களாலும் அழகான கருமுகில் வர்ணத்தாலும், செங்கனிவாயாலும் பனிமொழியாலும் சிறந்த ஔதாரிய ரூபலாவண்ணிய குணங்களாலும் தன்னைப்போன்ற அருமை வஸ்துவையும் பக்தர் வேண்டுமுன்னமே கொடுக்கும் ஸ்வபாவத்தால் என்னைக் கட்டித்தழுவி என் மனஸைக் கவர்ந்துகொண்டனர்.

---

6-ம் பாசுரம்.

*என்னுமின்னுநூல்மார்பனென்கரும்*
*பெருமானென்கண்ணன்றன்*
*மன்னுநீள்கழல்மேற்றண்டுழாய்*
*நமக்கன்றிநல்கான்*
*கன்மின்களென்றும்மையான்கற்பியா*
*வைத்தமாற்றஞ்சொல்லிச்*
*சென்மின்கள்தீவினையேன்வளர்த்த*
*சிறுபூவைகளே.*

பதக்குறிப்புக்கள்:—"மன்னும்நீள்கழல்—ஸ்திரமான தன் திருப்பாதத்தை எங்கே இருந்து யார் அபேக்ஷித்தாலும் பக்தர்மேலன்புவாய்ந்து அங்கே வந்து அவற்றைக் கண்ணனெம்பெருமான் உதவுவான்.

கற்பித்து வைத்த மாற்றம் - பகவானின் திருநாமங்கள். வளர்த்த சிறு பூவைகள் - வெகு சின்னதான பூவைகளை நெடுந்தூரம் தூது அனுப்புவது ஒழுங்கல்ல, அனுப்பவேண்டி யிருக்கிறதேயென்று தயவுபாராட்டுகிருர். சென்ற பாசுரத்தில், கிளிகளைத்தூதுவிடும்போது "நுங்கட்கு யான் உரைக்கேன் வம்மின்" என்று விளையாடிக்கொண்டிருக்கிறகிளிகளைத்தன்வேலைநிமித்த மனுப்பவேண்டிவருவதே என்று இதுபோலேயே தயவால் சொன்னபடி.

கன்மின்களென்று - பாடம்படியுங்கோளென்று, யான் - உங்களுக்கு வேலை ஏவும் யான், கற்பியாவைத்த- பல ஆவர்த்தி சொல்லி வைத்த "மாற்றம்"—இதுயாதென்று கூறவில்லை. ஆயினும் மேல் கிளிகளுக்குக்கற்பித்த வார்த்தைகளாகவே இருத்தல் வேண்டும். "இதுவோ தக்கது" என்றல்லவோ கிளிகளுக்கும் தும்பிகளுக்கும் கற்பித்த சொற்கள். இதையே பல்லவியாக நீங்சள் பகவானிடத்திற்கு யாத்திரை செல்லும்போழ்து சிறுபிராயமுள்ளவர்களாகையால் மறவாமலிருக்கும் நிமித்தம்ஆவர்த்தியால்சொல்லிக்கொண்டே செல்லுங்கோள். இதுவோ தக்கவாறென்று சொல்லவேணுமென்று தான்வளர்த்த பூவைகளை யபேக்ஷித்தபின்னரு மவைகள்போகாதிருந்தவாறேநம் வேண்டுகோளை அவன் செய்தருளாவிடில் செய்வதெனென்று போகாதிருந்தனவாகக்கொண்டு தனக்கே சொந்தமான திவ்யபூஷணங்களையும் திவ்வியரூபத்தையும் தன்னையும் எனக்கே யனுபவிக்கப்பிரியவஸ்துவாகக் கொடுத்து உதவும் என் கண்ணன்தன் மன்னுநீள்கழல்மேலுள்ள தண் திருத்துழாயை நமக்கன்றி வேறொருவருக்கும் கொடான், ஆதலா லீண்டெனச் செல்லுங்கோள்"—ஆருயிரட்படி.

விசேஷக் குறிப்பு:—பூவைகள் தூதுபோகியும், பகவான்தங்கள்பேச்சை ஆதரிக்காவிடி லென்செய்வதென்றயோசனையால்ஆலஸியம்செய்ததாகஆருயிரப்படி உரைகூறுவதற்குக்கமகம்யாதென்ருல் "நமக்கே திருப்பாதத் திருத்துழாய் கொடுப்பானென்று" இப்பிராட்டி மேற் சொல்வது, இந்த ரீதியான கேள்விக்குப் பதிலாகவென்றுஊஹிக்கவேண்டும். இல்லையேல்இவ்வுறுதிச்பேச்சுக்குச் சந்தர்ப்பம்சொல்ல வாய்க்காது, சங்கதமு மாகாது.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
மடச்யாவனப்ராசா மடமிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துளளது) மடல். மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
மடச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்ட்ராலகஸ்
ஜவரேக
[பன்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

199170
M211,N28KN
N34:7.27

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

வண்டியின்மீது புல்:--சமீபத்தில் பெர்லினில் உஷ்ணம் அதிகமாயிருந்தது. வெண்ணெயை ஏற்றிச்செல்லும் பஸ்களில் வெண்ணெய் உஷ்ணத்தால் இளகிவிடுகிறது. இதனால் வெண்ணெய்க் கம்பெனிகளுக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டது. ஆகவே பஸ்வண்டிகளின் தளத்தில் வளர்க்கும்படி கூறிய யோசனையை அவர் பின்பற்றினர். இப்பொழுதும் சில பஸ்களின் மேல்தளத்தில் புல் வளர்த்து வருகின்றார்கள். பஸ்கள் ஓடும்போது அதற்குத் தண்ணீர் வார்த்தும் வருகிறார்கள்.

* * *

பறவையின் தியாகம்:—குயின்ஸ்லாண்டில் சமீபத்தில் ஒரு ஓட்டல் தீ பிடித்துக்கொண்டது. கட்டிடத்தின் மாடியில் உள்ள ஒரு பொந்தில் ஒரு பறவை நெருப்பில் வெந்து இறந்திருக்கக்கண்டனர். அப் பறவையை வெளியில் எடுத்துப் பார்த்தபோது அதன் அடி வயிற்றில் சில முட்டைகள் நல்ல நிலைமையிலேயே இருந்தன. முட்டைகளைக் காக்கும் பொருட்டு அப் பறவை தன் உயிரையே அர்ப்பணஞ் செய்தது.

* * *

காமாவின் உணவு:—காமா என்ற பேர்போன பஞ்சாப் பயில்வானின் தினசரி உணவு அடியில் வருமாறு:—இரண்டரைச் சேர் ரொட்டியும் இறைச்சியும், மூன்று சேர் நெய்யும் பாலும், ஒருசேர் வாதம் பருப்பு. அவர் நாள் தோறும் நாலு மைல் தூரம் ஓடுவாராம். குஸ்திப் பயிற்சி செய்வார். தண்டாலும் எடுப்பார். ஆனால் அவர் எப்பொழுதேனும் வேறு பயில்வானுடன் போராட நேர்ந்தால் அன்று சிறப்பான உணவு முத்து பஸ்பம், ஏழு கோழி அடித்துச் செய்த சிக்கன் சூப் ஒன்றேகால்சேர் வாதம் பருப்பு, ஐந்து சேர் பால், அரைச் சேர் நெய், ஒரு கட்டு தங்க்ரேக் இவ்வளவும் சாப்பிடுவார். இதற்காக வழக்கமான சம்பளத்துடன் தினப்படி நூறு ரூபாய் கொடுக்கிறார்கள்.

* * *

பாம்பு சம்மாரி:—ஆஸ்திரேலியாவிலும் ஆப்பிரிக்காக்காடுகளிலும் மரங்கொத்திபோன்ற ஒரு வகைப் பறவைகள் இருக்கின்றனவாம். அவை பாம்புக்குப் பரம விரோதிகளாம். அவை பாம்புப் புற்றுகளைத் தேடிச் சென்று அதற்குள் புகுந்து பாம்புகளுடன் போராடிக் கொன்று வெளியே யெடுத்துக்கொண்டு வருமாம். பெரிய பாம்பும் இந்தச் சிறிய பறவையைக்கண்டால் நடுங்குமாம். இவற்றை வேறு தேசங்களில் கொண்டுபோய் வளர்த்துப் பாம்புகளை அழிக்கலாமென்று அதிகாரிகள் யோசனை செய்கிறார்களாம். மயில், கீரி, கருடன் பாம்புக்கு விரோதிகளானாலும் அவை பாம்புகளைக் கண்டால் மட்டுமே கொல்லுமாம். ஆனால் இந்தப் பறவைகள் பாம்புகள் இருக்கும் இடந்தேடி அவற்றுடன் போராடி ஒழிக்குமாம்.

* * *

அரிய பரிசு:—சிகாகோவில் ஒருவர் தன் மனைவி பிறந்த தினத்தன்று ஒரு புஸ்தகம் ஒன்றைச் சன்மானம் செய்தார். "தற்கொலை செய்துகொள்வதற்கு 201 வழிகள் உண்டு" என்பதே அப்புத்தகத்தின் பெயர். இந்தப் புத்தகத்தைக்கண்டதும் மனைவிக்குக் கோபம் வந்துவிட்டது. உடனே தன் புருஷனை விவாகரத்து செய்ய வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

* * *

கல் மழை:—ஸ்பெயினில் ஜெரோனா என்னுமிடத்தில் சமீபத்தில் ஆகாயத்திலிருந்து கல் மழை பெய்தது. ஒவ்வொரு கல்லும் சுமார் 1¼ ராத்தல் நிறையிருந்தது.

**NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.**

**1933 Results.**

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.

All forms of life assurance policies issued at low safe rates of premium.

**Specialities.**

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

**Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,**
Head Office:—
**NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.**
for Fire, Motor & Accident policies.

**A sound Company.**
Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

**யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.**

ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906-ல ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.

யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்த இன்வெஸ்ட்மெண்டும், வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.

யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.

ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. } அல்லது { இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்

இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

**இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்**

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 58 வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

**32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1**

இனும்! இனும்!!

**"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"**

இனாமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.**

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)